ஸ்ரீ

தமிழரசு.

வணக்கம்.

அங்கயற்கண்ணம்மை.

"பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலர் வாய்மைதூய்மை
இங்கெமக் கருள வல்ல வி‌ணையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவழமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி."

மலர்-க	உருத்ரோத்காரிஸு ஐப்பசிமீ 1923ஸு அக்டோபர்மீ நவம்பர்மீ	இதழ்-க

முன்மொழி.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப் பலகையுந் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா" டானது

செந்தமிழ் நாடெனயாவராலும் வழங்கப் பெறுவதாம். அதன் கண் வழங்கும் மொழி செந்தமிழ்மொழி யென்று கூறப்படும். அச்செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள தென்பாண்டிநாடு குட்டநாடு குடநாடு கற்காநாடு வேண்நாடு பூழிநாடு பன்றிநாடு அருவாநாடு அருவாவடதலைநாடு சீதநாடு மலையமான்நாடு புனல்நாடு என்னும் இப்பன்னிரண்டு நாடுகளும் கொடுந்தமிழ்நாடு என்றுபெயர்பெறும். அவற்றின் கண் வழங்கும் மொழி கொடுந்தமிழ் மொழியாம். எனவே அவ்விரண்டு மொழியும் பொதுவாகத் தமிழ்மொழி என்று வழங்கப்பெறும்.

இப்பத்திரிகை அத்தமிழா னியன்று, அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்னும் ஆறு அங்கங்களுடனும் கூடி விளங்கும் அரசன் போல, அம்மொழியில் சிறந்து விளங்கித் தமிழ் நாட்டிலும் பிறநாடுகளிலும் சென்றுலாவித் தன்புகழை நிலைநிறுத்து மாதலின் "தமிழரசு" என்று பெயருடைய தாயிற்று. இப்பத்திரிகை, தன்னிடத்தில், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கான நூல்களின் ஆராய்ச்சிகளும், சரித்திரங்களும்,பழங்கதைகளும், மொழிபெயர்ப்புக்களும், நீதி ஒழுக்கம் இவற்றை விளக்கும் விஷயங்களும், சமய நூல்களும், நவீனங்களும், நாடகங்களும் இன்னும் பிற அரிய விஷயங்களும் கொண்டு யாவர்மனத்தையும் கவரும் என்பது திண்ணம். அன்றியும், இது, ஆடவர் பெண்டிர் பெரியோர் சிறியோர் கற்றோர் கல்லாதோர் என்னும் வேறுபாடின்றி யாவரும் அறிந்து மகிழ்ச்சி பெறுவதற்குரிய நடையில் வெளியில் உலாவும் என்று அறிக.

ஒவ்வொருபத்திரிகையும் தனக்குத்தனக்கென்று சிறந்ததொரு போக்கினை அனுசரித்துச் செல்லுமாதலின் ஒரேமொழியில் பல திறப்பட்ட பத்திரிகைகள் தோன்றியுலாவுவது மிகையாகாது. அங்ஙனம் ஒருமொழியில் பல பத்திரிகைகள் உலாவுவது அம்மொழிக்குப் பெருமையும் வளர்ச்சியுமாகும், ஆதலால் யாவரும் எல்லாப் பத்திரிகைகளையும் வாங்குவதால் தங்களுடையதாய்ப்பாஷைக்குத் தங்களாலியன்ற தொண்டினைச் செய்தவராகக் கருதப்படுவார்கள். ஆகவே யாவரும் ஒவ்வொரு பத்திரிகையையும்பார்த்து அவற்றின் கண்ணுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்வது, அறிவு மிகுவதற்குரிய வழியாகுமேயன்றிப் பொருட்செலவும் காலக்கழிவும் என்று கருதப்படமாட்டாது. ஆதலின் தமிழ்நாட்டார் அனைவரும் தமிழ்மக்களாவார் பலரும் தாங்கள் மற்றப்பத்திரிகைகளை ஆதரிப்பது போலவே தமிழ்நாட்டில்புதிதாகத் தோன்றிய "தமிழரசு" என்னும் இப்பத்திரிகையையும் பல்லாற்றானும் ஆதரிப்பது தங்களுடைய கடமையென்று கருதிப்பத்திரிகையை ஆதரிக்கும்படி தமிழ் மக்களை வேண்டிக்கொள்கிறேன்.

தமிழ் மக்களிடத்துக் கல்வியறிவு மிகவேண்டும் என்பதும் தமிழ்மொழியிடத்துக் கலைகள் பல்க வேண்டும் என்பதும் இப்பத்திரிகையின் முக்கிய நோக்கமாகும்,

இப்பத்திரிகை இறைவன்திருவருளாலும் சந்தாதார்களுடைய உதவியாலும் நீடூழி நின்று நிலவும் என்று கருதி இதனை வெளியிடத் துணிந்தேன்.

பத்திராதியர்.

வேம்பத்தூர்ச் சங்கத்தார்வரலாறு.

வேம்பத்தூர்:—இவ்வூர் பாண்டிவளநாட்டில் மதுரைக்கு வடகிழக்கில், இரண்டுகோசதூரத்தில் வையைநதிக்கு வடக்கே உள்ளது. இது நிம்பை என்று வழங்கப்பெறும். வேம்பத்தூரென்பது பண்டைக்காலத்தில் வேம்பற்றூரென்றே வழங்கிவந்ததாகத் தெரிகின்றது. இவ்வூர், ஆதியில் மதுரைக்குக் கிழக்கேயுள்ள மணலூரிலிருந்து பாண்டிய நாட்டையாண்ட குலசேகரபாண்டியனென்பவனால், பிராமணர்களிரண்டாயிரத் தெண்மர்களுக்குக் கலியுகம் பிறந்த பதினாறுவது வருடத்தில் அவ்வரசனது பதினேழாவது பிராயத்தில் தானஞ்செய்யப்பட்டது.

வெண்பா.

"தனக்கொருபத் தேழு கலிக்கொருபத் தாறு
புனக்குடுமிக் கோமான் புதல்வன்—மனக்கினிய
தென்னிம்பை யூரதனைச் சீர்மறையோ ருக்களித்தான்
மன்னன் குலசே கரன்"

இவ்வெண்பா இவ்வூர்ப் பெருமாள்கோயிற் கருப்பக்கிரகச் சுவரின் வெளியே உள்ள சிலாசாசனத்திலுள்ளது.

"குலசேகரபாண்டியன் என்பவன் அகரமேற்ற நினைந்து, சாகேதபுரி என்ற இடத்திலிருந்து பிராமணர் இரண்டாயிரத்தெண்மரை யழைப்பித்து அவர்கள் நாமாவலியைப்பதிந்துகொண்டு முறையே ஒவ்வொருவருக்கும் மனையும் நிலமும் கொடுத்துக் கொண்டே வந்து, இறுதியிலெஞ்சிய கணபதியென்னும் பெயருள்ளவரை யழைத்த காலையில் யாதுகாரணத்தாலோ அவர்வரவில்லை; அப்பொழுது ஸ்ரீ மஹாகணபதி ஒரு பிரமசாரி வடிவங்கொண்டுவந்து யான்

கணபதியென்றுகூறி அவற்றையேற்றுக்கொண்டு மறைந்தருளினர்.
உடனே பாண்டியன் வியந்து பரவசமுற்று, அவருக்கென்று
கொடுத்த மனையில் கோயில் கட்டுவித்து அதிலவருடைய திருவுரு
வத்தைப் பிரதிட்டைசெய்து நிலத்தையுந் தேவதானமாக விட்டன
னென்றும் அவ்வூரே இது என்றும் ஒரு பழையசரிதம் பாண்டி
நாட்டில் கர்ணபரம்பரையில் வழங்கிவருகின்றது. வேம்பத்தூரில்
அக்கிரகாரத்திற்கு மேற்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்
கும் ஸ்ரீமஹாகணபதிக்கமைந்துள்ள இரண்டாயிரத் தெண்விநாய
கர் என்னும் திருநாமமும் இந்தப்பழைய சரிதத்தை வலியுறுத்
தும்" இது திருவாலாயுடையார் திருவிளையாடற் புராண ஆசிரியர்
பெரும்பற்றப்புலியூர் நம்பியின் வரலாற்றில் பிர்மஸ்ரீ மகாமகோ
பாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதியபகுதி. தானம்
பெற்றமறையவர்கள் தம்முளொன்றுகுழுமித்தமிழ் நூலாராய்ச்சி
யைச் சதாகாலமுஞ் செய்துகொண்டுகாலங்கழித்தனர். அதனாலவர்
கள்சங்கத்தாரென்றுபெயர்வகிக்கப்பெற்றார்கள். இவ்வேம்பத்தூர்ச்
சங்கத்தவர் பிற்காலத்திற்றங்களுடையவூராகிய வேம்பத்தூரை
விட்டுவிட்டுப்பாண்டி நாட்டின்கண்ணுள்ள வல்லநாடு, தென்காசி,
கீழப்பாவூர், கற்குளம், பனையூர், இலுப்பையூருணி, கரிவலம்வந்த
நல்லூர், குறுங்களாவனம், திருநெல்வேலி, விரைசோழன்
முதலிய பலவூர்களிலுஞ் சென்றுவதிவாராயினர். அவர்கள் எங்குச்
செல்லினும் தங்களை வேம்பத்தூராரென்றே கூறிக்கொள்வது
வழக்கம். இப்பொழுது ஒருசிறு பகுதியினரே வேம்பத்தூரின் கண்
வதிகின்றனர். இவ்வேம்பத்தூரிலே, பாடுதுறைமுதலிய நூல்கள்
செய்துள்ள தத்துவராயரும் ஐயாயிரம் பாடலுள்ள பாகவதம்
இயற்றிய செவ்வைச்சூடுவாரும் வரதுங்கராம பாண்டியனுடைய
ஆசிரியரான ஈசானமாமுனிவரும் ஆனந்தலகரி சௌந்தரியலகரி
முதலிய நூல்களியற்றிய விரைக்கவிராசபண்டிதரும் ஞானவாசிட்
டம் பாடிய ஆளவந்தான்மாதவப்பட்டரும் பகவத்கீதையியற்றிய
ஸ்ரீபட்டரும் பராபரமாலைபாடிய அம்பிகாபதியும் நெல்லைவருக்கக்
கோவை பாடிய நெல்வேலிப் பெருமாளையரும் அழகர்கலம்பகம்
பாடியகவிகுஞ்சரமையரும் அழகர்பிள்ளைத்தமிழ்பாடிய சாமி கவி
காள உருத்திரரும் பிரபந்ததீபிகை பூகோளசாஸ்திரம் முதலிய

நூலியற்றிய முத்துவேங்கடசுப்பையரும் குன்றக்குடியுலா மதுரை நிரோட்டயமகவந்தாதிமுதலிய பிரபந்தமியற்றிய சிலேடைப்புலி பிச்சுவையரும் இவ்வூர்ச்சங்கத்தவரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இச்சங்கத்தவர்கள் சரித்திரத்தை முழுவது மறிந்தெழுதுவதற்குத் தகுந்த ஸாதனங்கள்எங்கள் வீட்டிலோலைச்சுவடிகள் மூலமநேகமிருந்தன. சென்ற சௌமியவருஷ ஆனிமீ 12உ யன்று எங்கள் வீடுகள் கூரைவேய்ந்த வீடுகளாயிருந்தமையால் எழுநாக்குடைய அக்கினிபகவானாலுண்ணப்பட்டுப்போயின. அப்பொழுது அக்கினி, ஓலைச்சுவடிகளையும் புசித்துவிட்டது. இதற்குச்சான்றாகத் தீப்பற்றிய அப்பொழுததானே எனது தந்தையாரும் சிலேடைப்புலியென்று பட்டம் வாய்ந்தவருமாகிய பிச்சுவையரவர்களும் எனது சிற்றந்தையாராகிய சௌந்தரபாரதிகளுஞ்சேர்ந்து வினவும் விடையுமாகப் பாடியகவி ஒன்றிருக்கின்றது. அது:—

வேண்பா.

"வீட்டையுந்தான் மேய்ந்தான் விளங்குமுன்னோர் தேடிவைத்த
ஏட்டையுந்தான் மேய்ந்தா னிதுவென்னே—கேட்டிலையோ
தெண்டிரைசூழ்ந்தச் செகதலத்த வன்னிதமு
மண்டினரைக் கொல்லியாதலால்" என்பது.

ஆதலால் ஏதோ சிலருடைய வரலாறுகள் கர்ண பரம்பரையாகவும் அவரவர்கள் செய்துள்ள நூன்மாத்திரத்தானும் அறியக்கிடக்கின்றன. அவ்வரலாற்றையானறிந்தவளவு எழுதத்தொடங்குகின்றேன்

பெரும்பற்றப்புலியூர் நம்பி.

இவர் பாண்டிவளநாட்டில் திருநெல்வேலி ஜில்லா சங்கரநயினார் கோவில்தாலூகாவைச் சேர்ந்த செல்லி நகரென்று பெயர் வாய்ந்த பனையூர்க்கிராமத்தில் ஸ்மார்த்தர்களாகிய வேம்பத்தூர்ச் சோழியர்வகுப்பில் கௌண்டின்யகோத்திரத்திற் சனித்தவர். இவர் தந்தையார் பெயர் முதலிய யாதொன்றும் தெரிந்திலது. இவர் பரம்பரையோர்கள் சிதம்பரம்ஆனந்ததாண்டவ மூர்த்தியின் திருவடிக்கண் மிக்கவன்புள்ளவர்களென்பதிவரியற்றிய திருவிளையாடற்புராணக்கடவுள் வாழ்த்துப் பெரும்பற்றப் புலியூர்த் துதிமுதலியவற்

முல் விளங்குகின்றது. இவர்க்கியற் பெயர் தில்லைநம்பியெனப்படும்.
வேம்பத்தூர்ச் சோழியர்களிலநேகருடைய இயற்பெயர்க்குப்பின்
நம்பி,இராயர்முதலியபட்டப்பெயர்கள் சார்த்தப்பட்டுப் பண்டைக்
காலத்தில் வழங்கிவந்த தென்பதை யெங்கள் வீட்டிலுள்ள ஓலைச்
சுவடிகளினின்றுங் காணலாம். ஆதலால் இவர்க்கிப்பெயர் வந்தது
போலும். இந்நம்பியார் வசித்துவந்த பனையூர்க்குச் செல்விநகரென
வரக்காரணம்,அவ்வூர் அதிதேவதையான செல்வியாரம்மை யென்ற
பெயருள்ள துர்க்காதேவியம்மன் கோயில்அங்கின்னுமுளதாதலால்
அவ்வம்மையார் பெயரே ஊர்க்குப் பெயராயிற்று. நிற்க இவர்
சிதம்பரம் மாளிகை மடத்திலிருந்த வெண்காடர் சிஷ்யராகிய விநா
யகரென்பாரிடத்தில் முறையே இலக்கிய விலக்கணங்களைக் கற்று
தேர்ந்துகொண்டார். பின் தாம்கற்ற கல்வியைத் தமிழுலகிற்கு
உபகாரப்படுத்துவான் கருதித் தீர்த்தவிசேடம் மூர்த்திவிசேடம்
தலவிசேடமாகிய இம்மூன்றுஞ் சிறந்த பாண்டிநாட்டின்றலைநக
ராகிய மதுரைமாநகரில்,தானே முளைத்த சிவக்கொழுந்தும் பங்கம
கற்றுமங்கயற்கண்ணி பாகனும் நித்தியம் பத்தி தவிராச் சத்தியவடி
யார்வேண்டிய வேண்டியாங்கே விரைந்தளிக்கும் பொடியார்மேனிச்
செடியார் வினைதீர்புண்ணியனுமாகிய ஸ்ரீ சோமசுந்தரப் பெருமா
னின்றிருவிளையாட லறுபத்து நான்கினையும் இனிய செந்தமிழிற்
கவிகளாகப் பாடிமுடித்துள்ளார். இவர்பாடிய பின்புதான்மற்றை
யோர்கள் திருவிளையாடல்கடோன்றின. இவரிப்புராணத்தைப்பாடி
முடிக்குங்காலத்திவரிருந்தவிடம் கார்வளங்கொண்டகப்பிஞ்சிநாடா
கும். இதைமதுரைக்குக் கிழக்கேயுள்ளதான மழைக்குப் புணை
கொடுத்த மங்கலநாடென்று சொல்கின்றனர். இந்நூலாசிரியர் நூலை
முற்றுவித்துமதுரையையாண்ட பாண்டியனொருவனால் பல்லக்கு
முதலிய பலவிருதுகள் பெற்றிருப்பதாக இவர் பாடியகவிதெரிவிக்
கின்றது. அக்கவிவருமாறு.

வெண்பா.

''பல்லக்கு மேலேறிப் பல்லக்கு மேலிட்டோம்
பல்லக் கணிசொக்கைப் பாடினோம்—பல்லக்கு

மன்னு குறையுண்டு மண்மதிக்கும் விண்மதிக்கும்
மென்ன குறையுண் டெமக்கு''.

இவரிருந்து பாடியவூர்ப் பெயர்முதலியவைகளை இந்நூற்சிறப்புப்பாயிரக் கவிகளும் வற்புறுத்துகின்றன; கவி:—

வெண்பா.

"அம்பதுமத் தார்ச்சல்வி யாண்டான் கௌணியர்கோன்
நம்பெரும்பற் றப்புலியூர் நம்பிவியர்—தெம்பெருமா
னுதிவிளை யாட லறுபத்து நான்கினையு
மோதி முடித்தா னுவந்து."

விருத்தம்.

"கார்வளங் கொண்ட மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டுரைத்தோன்
சார்பரசு ராமச் சதுர்வேதி மங்கலமாம்
சீர்தருதென் சல்லிநக ராண்டான்சொற் றில்லைநம்பி
யார்புனைவான் விளையாட லறுபத்து நான்கன்றே."

இதுகாறுமிவரதூர் பெயர் வரலாறு கூறினும். இனி இவரியற்றியதான திருவிளையாடற் புராணத்துள்ள சில கவிநயங்களையெடுத்துக்காட்டி மேற்சொல்கின்றேன்.

கடவுள் வாழ்த்து.

திருச்சிற்றம்பலம்.

"பொருப்பைப் பண்பொடுங் குனித்துச் சண்டவெம்
புரத்தைப் பொன்றமுன் சிரித்துக் கண்டவன்
கரப்பொற் குன்றடுந் திறத்துச் சிங்கமென்
கருத்துட் டங்குமஞ் செழுத்துச் சம்புவண்
டரக்குக் கொண்பதஞ் சலிக்குத் தென்றலந்
தழைப்பத் தொந் தொமென் றிசைப்பச் சந்தந்
திருத்தச் செம்பதம் புரிப்பித் தன்புறுந்
திருச்சிற் றம்பலம் திருச்சிற் றம்பலம்."

இவர் நடராசனிடத்து மிக்க அன்புள்ளவரென்பது முதல் முதலிலெடுத்த வாழ்த்துச் செய்யுளானே விளங்குகின்றது காண்க. இனியிவர் சந்தக்கவிபாடுந்திறமை யதிகரித்துள்ளவர் என்பது தோன்ற நரிகுதிரையான திருவிளையாடலில் குதிரைவேகக் குறிப் பைக் கவியாற் காட்டுகின்றார்.

விருத்தம்.

"அரனரி யயனச் சுறவர சுமுனு
யிரமுக சுபத க்ரமமுறு நெறியே
சரிகம பதனித் தகவனு மனியா
வருமறை யயமுய்த் தனன்வய முறவே."

இக்கவிதாசிரோமணி பாடிய சொல்மடக்குகளிலவசிய மீண் டொன்றெடுத்துக் காட்டவேண்டியதாக விருக்கின்றது. அதாவது நரிகுதிரையான திருவிளையாடலில்

விருத்தம்.

"வெம்பரி வரவுபார்த்து வீதிவாயிருக்குங்ககலைச்
சம்புமா சமாதியாலே சம்புமாத் தாழ்க்கக் கண்டு
வெம்பினீ டம்பி னோடி யோசனை மீண்ட தூதர்
செம்பரி வரவு நான்கு திசையிலுமில்லை யென்றார்."

என்ற இச்செயுளினிரண்டா மடியிலுள்ள சொன்மடக்கழகும் பொருள்நயமும் நோக்கத்தக்கது (சம்புமா—சிவபெருமானுடைய பெரிய சம்புமா—நரிகளாகிய குதிரைகள்.) மேலும் இக்கவிவர தோயன், தேவாரமுதலிய பாசுரங்களின்னின்னசமயத்துப் பாடப் பட்டதெனக் கூறும் மதிநுட்ப ஆராய்ச்சி கவனிக்கத்தக்கது.

பாண்டியன் வெப்புத் தீர்த்த திருவிளையாடலில் பாண்டியன் பக்கத்து அருகமதத்தர் இருந்து வியாதிதீராதது கண்டு, ஸ்ரீ சீகாழிப் பெருந்தகையாம் திருஞானசம்பந்தர். "மானினேர்விழி மாதராய்" என்றமுதனினைப்புள்ள பதிகம்பாடினர். அதனால் வியாதி தீர்ந்தது என்பது தோன்ற

விருத்தம்.

"எழின்மட மாத ரமைச்சனுர் திரண்ட
வேதிலார் திறங்களைக் கண்டே
செழியனுக் கருக ருகராக் கண்டேஞ்
சேர்ந்தன ரிங்குநம் முசத்தாற்
குழுவில்வெல் பவர்யார் தோற்பவர்யாரென்
றறிகிலே மெனப்பயங் கூர்ந்து
தொழுமதியாது மூனினேர் விழியென்
றெடுத்தனர் தொடுத்திருப் பதிகம்."

எனப் பாடியிருக்கின்றனர். இனி இந்நாவலவர் மதுரை மாநகரத்தின் பெருமையை ஒருசெய்யுளில் கடவுள் வாழ்த்தில் சந்தத்தோடு சொல்லியிருப்பதுபரமானந்தத்தைக் கொடுக்கின்றது

செய்யுள்.

"விதுவரவ மிதழிதிரிபதகைதலை பொதிசடையர்
விதமருவு கதிய தருள்வோர்
சதுமறைவி புதர்முனிவர் திதிபுதல்வர் துதிசெயிர
சதிகழ்தொல் பொதுவில்வருவோர்
அதிகரள நதியைமதி மதுரமுறி நதிசெய்திற
லதுலருயர் சதுரரிடம் வான்
மதிதவழு சுதையிலகு புதுமைதருகிதிதிகழு
மதிறழுவு மதுரை நகரே."

இப்பெருமான்காலம் கி.பி 1150-என்றுஒருவாறுதெரிகின்றது. இக்கவிகுலாதிபன் திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் பாடியதன்றி மற்றைய தொன்றும் பாடியதாகத்தெரியவில்லை. இத்திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தைப்பலவிடங்களுக்குஞ் சென்று ஏடுகள் தேடி யொன்றுபடச் சேர்த்துப் பரிசீலனை செய்து விளங்கச்செய்த பிரம்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்களின்னும் பல்லாண்டு வாழவும் இரு

பெருஞ் செல்வமேலோங்கிவரவும் மதுரைச் சொக்கநாயகன் மல ரடி மறவாதுசிந்தித்து வந்திக்கின்றேன்.

(தொடரும்)

வேம்பத்தூர்
சிலேடைப்புலி பிச்சுவையர் குமாரர்
பி. பாஸ்கரையர்,
தமிழ்ப்பண்டிதர் ம. க. ம.

திருஞானசம்பந்தர்.

நீர்வளம் நிலவளங்களிற் சிறந்த சோழநாட்டிலே சீகாழி என்னும் ஒரு சிவக்ஷேத்திரமுண்டு. அதில் வாழ்ந்து வந்த நான்மறையார்களில் கவுண்டின்னிய கோத்திரத்திற் சனித்த சிவபாதஹிருதயர் என்னும்வேதி யர் ஒருவர் இருந்தார். அவர்பகவதியார் என்னும் மாதரசியாரைத் தம் வாழ்க்கைத் துணையாக்கொண்டு இல்லறத்தை வழுவாதுநடத்தி வந்தார் அந்நாளில் உலகத்தில் சமணம் முதலாயுள்ள புறமதங்கள் தலையெடுக்கச் சைவசமயம் குன்றத்தலைப்பட்டது. அதனால் சிவபாதஹிருதயர் ஆறாக் கவலைகொண்டு அம்மதங்களைக் கண்டித்துச் சைவமதத்தை நிலைநாட்டும் படியான ஒருமகவைத்தமக்கு அளித்தருள வேண்டுமென அனுதினமும் தோணியப்பரைப் பிரார்த்தித்து வந்தார். வேண்டுவார் வேண்டுவதை யீயவல்ல தோணியப்பர் திருவுள்ளமுவந்து அவர்க்கு அருள்செய்யநினைந் தார். அவர் திருவருளால் பகவதியார் கருப்பவதியாகித் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஓர் ஆண்மகவை யீன்றார். தந்தையார் கேட்டுப் பேரு வகைபூத்து அக்குழவிக்கு வேதவழியிற் செய்யவேண்டிய சடங்குகள் அனைத்தையும் செய்துமுடித்தார். அச்சிசுவும் நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாக வளர்ந்து மூவாட்டைப் பிராயத்தையடைந்தது.

ஒருநாள் சிவபாதஹிருதயர் நீராடச் செல்லும்போது குழந்தையும் உடன்வரவேண்டுமென்று அழத்தொடங்கிற்று. அது கண்ட தந்தையார் "இதுவும் ஈசன்செயல்" எனச்சொல்லி உடன் அழைத்துச் சென்றார். குழந்தையை அவர் தண்ணீர்க்கரையில் வைத்துவிட்டு வைதிகமுறைப் படிஸ்நானம் செய்துகொண்டிருந்தார். அச்சமயம் கரையில் நின்றுகொண் டிருந்த பிள்ளையார் ஏதோஒன்றைமனத்தில் நினைத்துக்கொண்டு "அம்மே

அப்பா!'' எனஅழைத்து அழுதார். உடனே பரமசிவன் பார்வதிதேவி யாரோடு இடபவாகனத்தில்எழுந்தருளிவந்துபார்வதிதேவியாரைப் பொற் கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கறந்து அக்குழந்தையாருக்கு ஊட்டும் படி ஆணையிட்டார். அம்மையாரும் உடனே பொன் வள்ளத்திலே பாலைக் கறந்து அதிற் சிவஞானத்தைத் குழைத்து அப்பிள்ளையாருக்கு ஊட்டிய ருள அவரும் உண்டு அழுகை தணிந்தனர். தந்தையார் ஸ்நானம்செய்து விட்டுக் கரையில் வந்துகுழந்தையாருடையவாயில் பால்வடிந்திருத்தலைக் கண்டு கடுஞ்சினங்கொண்டு "யார் தந்த எச்சிற் பாலை உண்டனை?'' எனக் கோலோங்கி அதட்டினார். பிள்ளையார் தமது சிறியசுட்டுவிரலை நீட்டிச் சிக ரத்தைச் சுட்டிக்காட்டி "தோடுடையசெவியன்'' என்னும்திருப்பாடலைப் பாடினார். சிவபாதஹிருதயர் கண்டுஆச்சரியமடைந்தார். தேவர்கள் புஷ் பமாரி பொழிந்தார்கள் உலக மாதாபிதாக்களாகிய சத்தி சிவன் என் னும் இவர்களால் ஆளப்பட்டமையால் "ஆளுடைய பிள்ளையார்'' என் றும், சிவஞானத்திற் சம்பந்தப் பட்டமையால் "திருஞானசம்பந்தர்'' என் றும் அப்பிள்ளையாரை அன்று தொட்டு அழைக்கலாயினர்.

திருஞானசம்பந்தர் சீகாழிக் கோயிலுக்குட் சென்று சிவபெருமானை வணங்கித்தேவாரம் பாடித் தந்தையாருடைய தோளிலேறிக்கொண்டு இல்லம் வந்தெய்தினார். இவ்வதிசயத்தைக் கேள்விப் பட்டுப் பலரும் அவரைத் தரிசிக்கவந்தார்கள். மறுநாட்காலையில் ஆளுடைய பிள்ளை யார் தகப்பனார் தோளிலேறிக்கொண்டு திருக்கோலக்காவுக்குச் சென்று பரமசிவனை வணங்கித் தம்முடைய மெல்லிய கரங்களால் தாளம் போட் டுக் கொண்டு தமிழ்ப்பதிகம் பாடினார். அதுகண்ட சிவபெருமான் சிறு வர் திருக்கரம் நோவாவண்ணம் பஞ்சாக்ஷரம் எழுதிய பொற்றாளம் அளித்தார். திருஞான்சம்பந்தர் இறைவன் அருளைவியந்து பொற்றாளம் பெற்றுத்தம்மூர் வந்தடைந்தார். மறுநாள் முதல் பக்கத்திலுள்ள சிவ க்ஷேத்திரங்களுக்குச் சென்று வணங்கித் தமிழ்ப்பதிகங்கள் பாடிக்காழி க்கு வந்துசேர்ந்தார்.

பிள்ளையார் அருமைச் செயலைக்கேள்விப்பட்ட திருநீலகண்ட யாழ்ப் பாணர் அவரைத் தரிசிக்கக்காழிக்கு வந்தார். அன்னார்வரவை யுணர்ந்த ஆளுடையபிள்ளையார் அன்புடன் அவரை வரவேற்றுபசரித்தார். பிறகு அவரையும் தகப்பனாரையும் உடனழைத்துக்கொண்டு காழிவள்ளலார் சிதம்பரம்சென்றார். ஆங்குள்ள அந்தணர்களனைவரும்சிவகணங்களாகத் தோன்றப் பிள்ளையார்கண்டு தரிசித்துக் கனக சபையில் ஆநந்தத்தாண்ட வம் புரியும் நடராஜப் பெருமானைவணங்கித் தமிழ்ப்பதிகமும் பாடினார்.

யில் ஆங்கிருந்து புறப்பட்டுப் பலதலங்களுக்குஞ் சென்று பரமசிவனை வழிபட்டுத் தமிழ்மாலை சாற்றித் திருவரத்துறைக்கு வந்து சேர்ந்தார். ஆங்குள்ளவேதியர்கள் கடவுள் ஆணையின்படி காழிவள்ளலாருக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் இவைகளைக்கொண்டு வந்து கொடுத்தார்கள். அவரும் "இதுவும் என்னையாள் ஈசன்செயல்" என எண்ணிப்பெற்று மகிழ்ந்தனர். திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகையிலே றிக்கொண்டு பலதலங்களுக்கும் சென்று சீகாழி வந்தடைந்தார். அப்பொழுது முந்நூல்தரிக்கும் பருவம்வந்தடையச் சிவபாதஹிருதயர் வேதியர்களைக்கூட்டிவைத்து முந்நூல் தரிப்பித்தார். சகலகலைகளையும் ஓதாதுணர்ந்தார்க்கு வேதமோதும் அதிகாரமும் கொடுத்தார். பிள்ளையார் கொண்ட பேரறிவைக்கண்டு ஜனங்கள் அவரிடம் போந்து தங்களுக்குள்ள சந்தேகங்களைக்கேட்டுத் தெளிந்து கொண்டார்கள். அவர்களுக்கு ஞானபோனகர் பஞ்சாக்ஷரத்தின் மகிமையைப் பகர்ந்தார்.

ஆளுடையபிள்ளையார் மழவன்பாடிஎன்னும் ஊருக்குவந்தடைந்தார். ஆங்குஓர்பெண், முயலகன்என்னும் நோயால்வருந்திக்கொண்டிருந்தாள். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஆங்கு எழுந்தருளியிருப்பதை அவள் தகப்பன் கேள்வியுற்று அம்மாதையும் அழைத்துக் கொண்டு அவரிடம் வந்து உள்ளதை யெடுத்தோதினன். பிள்ளையார் கேட்டு அம்மாதின் துயரத்தைப்போக்கத் திருவுளங்கொண்டு இறைவனை வணங்கித் "துணி வளர்திங்கள்" என்னும் பதிகத்தைப் பாடினர். அதனல் அவளுக்கு அந்நோய் குணமாயிற்று. பின், அவர் அங்கிருந்து பட்டீச்சரம் என்னுந் தலத்தை நோக்கி வந்தார். வழியில் வெயிற் கொடுமை மிகுதியாயிருக்க அதற்காக ஓர் பூதம் விரைவாக முத்துப்பந்தலைத் தாங்கிவந்து "இது பட்டீச்சரத்தண்ணல்பயந்தது" எனக்கூறிற்று. பிள்ளையார் ஈசன் திருவருளைக்கண்டு வியந்து வழியிற் பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறைவந்துசேர்ந்தார். ஆங்குச்சிவபாதஹிருதயர் வந்து "யாகம் ஒன்று ஆற்றவேண்டியிருக்கிறது; அதற்குப்போதியபொருள் கொடுக்க வேண்டும்" என்று தம்மகனரிடம் தெரிவித்தார். பிள்ளையார் பிதாவின் எண்ணத்தைப் பூர்த்திசெய்யக்கருதி மாசிலாமணிப் பெருமானை வேண்டினர். உடனே ஒருபூதம் ஆயிரம்பொன் கொண்ட ஓர் பொற்கிழியை எடுத்துக் கொண்டுவந்து "இதுபரமசிவன் கொடுத்தது" எனச்சொல்லிக் கொடுத்தது. திருஞான சம்பந்தர் கண்டுமகிழ்ந்து அதனைத் தாதையாற் கொடுத்து வேள்வியை நன்குய்ச் செய்துமுடிக்கும்படி அனுப்பினர். அவ்வாறே அவரும் காழிநகர் சென்றடைந்துவேள்வியை முட்டற முடித்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாவடுதுறையினின்றும் புறப்பட்டுத் தருமபுரம் முதலாயுள்ள பலதலங்களுக்கும்சென்று சிவபெருமானை வணங்கித் தேவாரம்பாடிக்கொண்டு திருமருகல் வந்தடைந்தார். ஆங்கோர் மடத்தில்இருக்கும்பொழுது அழுகையொலியொன்றுகேட்டது. அதன் காரணம் யாதென விசாரிக்க ஓர் வணிகப்பெண் ஞானசம்பந்தப் பெருமானுடைய திருவடிகளில்விழுந்து நமஸ்கரித்துக்கூறுவாளாயினள். "நான் வைப்பூர் என்னும் ஊரிற்பிறந்தவள்;வணிகர்ஜாதி; என்தகப்பனார் பெயர் தாமன்; அவருக்கு என்னைச் சேர்த்து எழு பெண்மக்களுண்டு; அவர் தம்மருமகனாகிய இவருக்கே ஒவ்வொரு மகளையும் விவாகம் செய்து கொடுப்பதாக வாக்களித்துப் பணத்தாசையால் ஆறுமக்களையும் அன்னியர்க்கே மணம் செய்து கொடுத்தார்; என்னையும் அவ்வாறே செய்துவிடுவார் என்றெண்ணி யான் இவரையழைத்துக்கொண்டு வந்தேன்; வந்தவிடத்தில் அந்தோ வல்விடத்தினுலிறந்தார்; தேவரீர் காத்தருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். பிள்ளையார் கேட்டு இரக்கங்கொண்டு "சடையாய்" எனும்பதிகத்தைப்பாடினார். உடனே அவ்வணிகன் இறைவன் திருவருளால் தூங்கிவிழித்தவன்போல் எழுந்தான். அவர்கள் இருவரையும் விவாகம் பண்ணிக்கொண்டு மகிழ்ந்தினிது வாழுமாறு ஆணையிட்டுக் காழியர்கோன் சிறுத்தொண்ட நாயனாருடன் மற்றுமுள்ள தலங்களைத் தரிசிக்கவேகினார்.

திருநாவுக்கரசுநாயனார் திருப்புகலூர் என்ற க்ஷேத்திரத்தில் இருக்கின்றார் எனத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் கேள்விப்பட்டு அவரைக்கண்டு விசேஷம்யாது? எனக்கேட்க, அவர்,திருவாரூரில் திருவாதிரையின் சிறப்புக்களை யெல்லாம் ஓர் பதிகத்தின் மூலம் விளக்கியருளினார். உடனே ஆளுடைய பிள்ளையார் அப்பரையும் உடன் அழைத்துக்கொண்டு திருவாரூர் முதலாயுள்ள பலதலங்களையும் தரிசித்துக்கொண்டு திருவீழிமிழலை வந்துசேர்ந்தார்.

ஆங்கன்னாரிருவரும் அடியார்களுடன் வாழ்ந்து வருங்காலத்தில் வானமழை குன்றியதால்வளமெங்குங்குன்றிவிளைச்சலின்றி மிகக்கொடியதொருபஞ்சம்உண்டாயிற்று. அப்பஞ்சத்தின்கொடுமையை அடியார்கள் சகிக்கலாற்றாதவர்களாய்த் திருநாவுக்கரசரிடத்திலும், திருஞான சம்பந்தரிடத்திலும் தெரிவித்தார்கள். அவ்விருவரும் பரமசிவனிடம் பிரார்த்திக்க,ஈசன் "யாம் உங்கள் ஒவ்வொருவருக்கும் அனுதினமும் ஒவ்வொரு பொற்காசு அளிப்போம். நீங்கள்அதனை மாற்றி அடியார்கள் மகிழ அன்னமளித்துவாருங்கள்" எனக்கூறி மறைந்தருளினார்.அவ்வாறேஅன்றுமுதல்

கிழக்குவாயிற் படியிலோர்காசும், மேற்குவாயிற் படியிலோர்காசும் இருக்கக் கண்டார்கள். அவ்விருவரும் அதனை வணங்கியெடுத்துப்போய் மாற்றி அடியார்களுக்கு அமுதளித்து வந்தார்கள்.

அப்பர் அடியார்கள் வேளையிலுண்டும், திருஞானசம்பந்தர் அடியார்கள் காலந்தாழ்ந்து உண்டும் வந்தார்கள் இதனையுணர்ந்த ஆளுடைய பிள்ளையார் காரணமென்கொலோ என வினவினார். அப்பொழுது அமுதடுவோர் வந்து ஸ்வாமிகளை நமஸ்கரித்து எழுந்து நின்று மிகுந்த வணக்கத்துடன் "ஸ்வாமி! கடையில் காசைமாற்றச் சென்றால் வாக்கரசர்காசுக்கு வாசிகேட்கின்றாரில்லை; நம்காசுக்கோ வாசிகேட்கின்றார்கள்; அதனால் மாற்றிப் பண்டம்வாங்கிவர நேரமாகின்றது என்றுகூறினார்கள். உடனே காழியர்கோன் திருவீழிமிழலை யரனாரிடம் சென்று வாசிதரக்காசுதாருமெனப்பாட அதன்படி தேசுமிகுந்த காசினை யீசன் அளித்தருளப்பெற்று மகிழ்ந்தனர். சிறிது நாளைக்கெல்லாம் பஞ்சம்தீர்ந்து நாடும் செழிக்கலாயிற்று. அடியார்களும் குறையறவாழ்ந்துவந்தார்கள்.

சில நாட்சென்ற பிறகு திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் அங்கிருந்து புறப்பட்டுப் பலதலங்களுக்கும் சென்று சிவபெருமானை வணங்கிக்கொண்டு வேதாரண்யம் வந்துசேர்ந்தார்கள் ஆங்குச்சிவபெருமானை வேதங்கள்வந்து அர்ச்சித்துக் கதவைச்சாத்திப் போயிருந்தமையால் அவ்வூரார் அக்கதவைத்தாங்கள் மீண்டுந்திறக்க அஞ்சிப் புறத்தே ஓர் வழிசெய்து கொண்டு அதன் வழியே போய்வந்து கொண்டிருந்தார்கள். ஸ்வாமிகள் இருவரும் தங்கள் திருக்கூட்டத்தாருடன் ஸ்வாமிதரிசனத்துக்குக் கோயிலுக்குச்சென்றகாலத்தில்ஆங்குள்ளார் இவ்விவரத்தையெடுத்தோதினார்கள். அவர்களிருவரும் கேட்டு ஈசனைநேர்வழிச்சென்று வணங்குதல் முறையே யன்றிப் புறத்துள வழியாற் செல்லுதல் முறையல எனத்துணிந்து திருஞானசம்பந்தர் அப்பரைப்பார்த்துக்கதவைத் திறக்கும்படி பாடக் கேட்டுக் கொண்டார். வாகீசரும் அதற்குடன் பட்டு வண்டமிழினால் ஓர்பதிகம்பாடியும்கதவு திறக்கப்படவில்லை. நாவரசர்கண்டு மனம் வருந்தி "இரக்கமொன்றிலீர்" எனப்பாடத் தொடங்கக் கதவு திறந்தது. உடனே இருவர்களும் திருக்கூட்டத்தாருடன் உட்சென்று ஸ்வாமியை வணங்கினார்கள். பிறகு திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைக் கதவையடைக்கப் பாடும்படி கேட்க அவரும் "சதுரமறை" எனும் தமிழ்ப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே கதவு அடைத்துக்கொண்டது. அன்றுமுதல் கதவு அடைக்கத் திறக்கலாயிற்று. ஆங்குஇருவர்களும் சில நாள்வசித்திருந்தார்கள்.

ஈங்கிவர்கள் இவ்வாறிருக்கப் பாண்டிய நாட்டில் கூன் பாண்டியன் என்னுமோர் அரசன் அரசாட்சிபுரிந்து வந்தான் அவன் முன்னை வினைப் பயனால் சைவசமயத்தை யொழித்துச் சமணசமயத்திற் பிரவேசித்தொழுகுவானாயினன் 'மன்னனெப்படி மன்னுயிரப்படி' என்னும் முதுமொழிப்படி குடிகளும் அச்சமயவழி நின்றொழுகுவாராயினர். நாட்டில் குடிகள் அனைவரும் வேதமார்க்கத்தை அறவேகைவிட்டனர். விபூதிருத்திராக்ஷங்களைத்தள்ளி மயிற்பீலியை யேந்தித்திரியத் தலைப்பட்டனர். எங்கும் பார்த்தாலும் பாயுடையிடுக்கித் தலைமயிரைப் பறித்தெறிந்துவிட்டு நின்று கொண்டே புண்கின்ற சமணர்களே மலிந்திருந்தார்கள். மன்னன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறையாரும் மாத்திரம் அப்படுகுழியில் வீழாது இரகசியமாகச் சைவசமயத்தைத் தழுவிவந்தார்கள். இவர்கள் இருவரும் அல்லும் பகலும் ஆலவாயண்ணலை இத்தீச்சமயமொழிந்து சற்சமயமாகிய சைவசமயம் தலையெடுக்கும்படி அருள்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துவந்தார்கள்.

(தொடரும்)

கோவிந்தசுவாமி ஐயர்.

அனுபவ ஸங்கீதம்.

(வரலாறு)

அகண்ட பரிபூர்ணானந்த சின்மயமான ஒருபொருள், நாமரூபமற்று நாதவடிவாக என்றும் நிலைபெற்றிருக்கும். அந்த நாதப் பிரமத்தை ஒவ்வொரு கணமும் சிந்திப்பாம்;

இவ்வுலகம் தோன்றுவதற்கும் முன்னரே எங்கும் வியாப்தமாகி நிலைபெற்றிருந்தது, நாதமென்ற உண்மைப்பொருள் ஒன்றுதான் என்று வேதசாஸ்திரங்களும் அனுபவம் வாய்ந்த மஹான்களும் முறையிடுவது பிரசித்தமன்றோ? அத்தகைய நாதமானது உலகம் தோன்றிய பின்னர் மஹா ஞானிகளாகிற நமது முன்னோர்களால் நாதத்தினுடைய சுவரூப மின்னதுதான் என்று தீர்மானிக்கப் பெருமுயற்சி செய்யப்பட்டு ஒலிவடிவமான நாதத்தை யறிந்து

சொல்லுதற்குச் சங்கேதமான வரிவடிவுகளாக அகராதி க்ஷகாராந்தமான அக்கரங்களாகவகுக்கப்பட்டன. அவ்வக்கரங்களில்சிலவற்றை ஒன்று கூட்டி மந்திரங்களாகச் செய்து அம்மந்திரங்களால் மும்மூர்த்திகளாகிறதெய்வங்களை உபாசித்தார்கள். ஆகையால்தான்"தந்மந்திரம் பிராமணாதீநம்''என்றபடி பிரம்மஞானிகளான பெரியோர்கள் ஆதியான நாதத்தை மந்திரமூலமாகஉபாசித்து அனேகம் சித்திகளைப் பெற்றார்கள் என்பது பிரசித்தமன்றோ?

இன்னும் முதல் முதல் நாதம், உதாத்தம் அனுதாத்தம் ஸ்வரிதம்' என்று மூன்று சுவரங்களாக வகுக்கப்பட்டு ருக்வேதத்தைக் கானரூப முள்ளதாகச் செய்து வந்தது. அதன் மூன்று சுவரங்களிலிருந்து மேலும் ஒரு சுவரம் அதிகமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அதற்கு 'ப்ரசயம்' என்று பெயர் வைத்து எஜுர் வேதமாகக் கானம் செய்யப்பட்டது. பிறகு ருக்வேதத்திலுள்ள சுவரங்கள் மூன்றும் எஜுர்வேத சுவரங்கள் நான்கும் சேர்த்து ஏழு சுவரங்களுள்ள சாமவேதமாகச் செய்யப் பட்டுக் கானம் செய்து கொண்டு வந்தார்கள். இவற்றுள் சுவரப்பூர்த்தியான சாமவேதத்திலிருந்து "ஸாமவேதாத் இதம் கீதம் ஸம்ஜக்ராஹபிதாமஹ:'' என்றபடி பிரும்மதேவரால் ஷட்ஜக்ராமம் மத்யக்ராமம் தாரக்ராமம் என்று மூன்று ஸ்தாயிகளோடு குழந்தைகள் முதல் விருத்தர்கள் வரை கானம் செய்யும்படி உபவேதமாகிற இந்தக் காந்தர்வவேதமானது அமைக்கப்பட்டது.

இத்தகைய அருமைவாய்ந்த ஸங்கீத சாஸ்திரத்தைப்பற்றி ப்ரும்மா, பரமசிவன், நந்திதேவர், பரதமுனி, துர்க்கை, நாரதர், கோஹலர், இராவணன், வாயு, ரம்பை, கச்யபர், பரத்வாஜர் கௌதமர், வஸிஷ்டர், ச்யவனர், பிருங்கி, மதங்கர், தித்தலர், தும்புரு, யாக்ஞவல்கியர், பிருஹஸ்பதி, சுக்ரன், ஆஞ்சனேயர், விநாயகர், ஷண்முகர், ஆதிசேஷன், அர்ச்சுனன், அபிநவகுப்தன், மாத்ருகுப்தன், சார்ங்கதேவர், ஸோமநாதர், போஜன் முதலான பிரமுகர்கள் தங்கள் தங்கள் அனுபவங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

இவற்றுள் முக்கியமான சில பாகங்களை நான் பெரியோர்களிடம்கற்றுக்கொண்டபடியும் என் அனுபவத்தில் உள்ளபடியும் சில விஷயங்களை வெளியிட எண்ணுகிறேன். இதிலுள்ள குற்றங்களை மன்னித்துப் பெரியோர்கள் குணங்களை அங்கீகரிக்கக்கேட்டுக் கொள்கிறேன்.

(இன்னும் வரும்.)

L. முத்தய்யா பாகவதர்,
அரிகேசநல்லூர்.

மதிப்புரை.

(1) "கலிங்கத்துப்பரணி"

தமிழ்ப் பிரபந்த வகைகள் பலவற்றினுள் பரணி என்பது ஒரு வகைப் பிரபந்த வகையாம். ஓரரசன் பகையரசன் மேற் படையெடுத்துச் சென்று அவனுடைய ஆயிரம் யானைகளை யமரிடையட்டுப் பெற்ற வெற்றியை உடனிருந்து கண்ட புலன் சிறப்பித்துப் பாடுவது பரணியாம். அங்ஙனம் பாடுங்கால் தலைவன் சிறப்பைக் காளிகூளிக்கும் கூளிகாளிக்கும் கூறுவதாகக் கொச்சக வொருபோகால் பாடுவது மரபாம்.

தக்கயாகப்பரணி இரணியவதைப்பரணி என்று பரணிவகைகள் பல இருந்தாலும் அவை தேவர்களை மனித்தர் பாடியனவாகவுள்ளன. அங்ஙனமன்றி இக்கலிங்கத்துப் பரணி யானையாயிரமமரிடை வென்ற மானிட அரசனைப்பாடியதாக உள்ளது. ஆனையாயிரம் அமரிடைவெல்வது தேவர்களுக்கின்றி மனிதர்களுக்கே உரியதாதலின், பரணிபெறுவதும் மனிதர்களுக்கே சிறப்புடைய தென்க. பரணியால் மானவனையன்றித் தேவர்களைப் பாடுவது உபசார வழக்கெனவறிக.

அங்ஙனமாக, இக்கலிங்கத்துப்பரணி யொன்றே மனித்தவரசன் பெற்றதாக உள்ளது. பரணி பெறுவதற்கு அரசர்களின்மையாலோ பாடப்புலவர்களின்மையாலோ மானிடப்பரணி, வேறொன்று தோன்றாததாயிற்று. அதனால் இது தமிழினுக்கே சிறந்த பரணியென்று கொண்டாடும் நிலைமையிலுள்ளது. "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று

சிறப்பிக்கப் பெற்றுள்ள இதன்வேறு சிறப்புக்களை நாம் இங்கு எடுத்துக் கூறவேண்டுவதில்லை. அவற்றைப் புத்தகத்தில் கண்டு தெளிக; நிற்க,

இத்தகைய சிறந்த நம்தமிழ்ப் பரணி இதற்குமுன் பலரால் அச்சிடப் பெற்றிருந்தும் அவை அவ்வளவு திருத்தமுற்று விளங்கவில்லை. இப்பொழுது பண்டித. அ.கோபாலையரவர்கள் இச்சிறந்தபரணியைச் சிறந்த நவீன முறையில் அச்சிட்டிருப்பது யாவரும் போற்றத்தக்கதாம். ஐயரவர்கள் அச்சிட்ட பரணியை யுற்றுநோக்குவார்க்கு அவருடைய அறிவின் திறமும் எடுத்துக்கொண்ட சிரமத்தினளவும் ஒருவாறு புலனாம். இக்கலிங்கத்துப் பரணி தெள்ளிய நடையில் அமைந்து கிடப்பினும் பொருள்காண்டல் சிறந்த புலவர்க்கன்றி மற்றையர்க்கு அரிதாகக் கிடந்தது. இப்பொழுது ஐயரவர்கள் ஆராய்ச்சிவன்மையாலும் அரும்பொருள் விளக்கம் முதலியவற்றாலும் யாவரும்எளிதில் பொருளுணர்ந்து கொள்ளுமாறு செய்தது தமிழிற்கே ஒருபெருங் கைங்கர்யம் செய்தவர்களாக ஆனார்கள். அதனால் தமிழ் மக்கள் அவரிடத்து மிகவும் கடப்பாடுடையவர்கள்.

ஐயரவர்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு ஒருபரிகாரமாக இப்புத்தகத்தைப் பதிப்பதற்குப் பொருளுதவிய திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ.காசிவாசி. சொக்கலிங்கத்தம்பிரா னவர்களுடைய அருளுடைமை இவ்விடத்தில் நாம் கொண்டாடற்பாலதாம். அவர்களைப்பின் பற்றி மற்றும் பெரியோர்கள் இத்தகைய பண்டித சிகாமணிகளை ஊக்கியருளுவராயின் தமிழிற் சிறந்தமொழி உலகத்தில்லை யென்ற வீறு தமிழிற்குண்டாகும் என்பது திண்ணம்.

(2) "நச்சினார்க்கினியன்."

இப்பெயர் கொண்ட மாதாந்தப்பத்திரிகையின் முதற் பகுதி திரிசிரபுரத்தினின்றும் நமது பார்வைக்கு வந்துள்ளது. இதன் ஆசிரியர் பண்டித. ம.கோபால கிருஷ்ணையர் ஆவர். அவரைத் தமிழுலகம் நன்கறியும். அப்பத்திரிகை மிகவும் சுலபமான நடையில்யாவரும் எளிதிற் படித்துணருமாறு பல அரிய விஷயங்களைக்கொண்டுள்ளது. அது தமிழ்மக்கள் யாவரிடத்தும் சென்று மகிழ்வூட்டற்பாலது. அவருள்ளும் மாணாக்கர்களுக்கு அது இன்றியமையாத் தோழனாம்! அதன்கண் பரீக்ஷை வினாக்கள், தோன்றுவதே அதற்குக்காரணமாம். ("கிரவுண்" அளவில் முப்பதிரண்டுபக்கங்கள் கொண்டுள்ளது. வருடச்சந்தா ரூ 2—0—0)

பத்திராசிரியர்.

ஸ்ரீ

காமந்தகீய நீதிசாரம்.

முதலாவது பிரகரணம்.

இந்திரியங்களையடக்கி யாளுதல்.

1. அரசனுடைய மகிமையினால் இவ்வுலகம் நீடித்த காலமாக ஒழுங்கு தவறாமல் இருந்துகொண்டு வருகின்றது. தெய்வத் தன்மை பொருந்தியவனும், செங்கோலைச் செலுத்துபவனும், செல்வம் நிறைந்தவனும் ஆகிய அவ்வரசன் மேன்மையை அடைக.

2—6. உலகமுழுவதும் பரவியதும் பிறரிடம் ஏற்றுண்ணாத முனிவர்களுடைய பரம்பரையைப் போன்றதுமான வம்சத்தில் பிறந்தவரும் இந்நிலவுலக முழுவதும் தமதுபுகழைப் பரப்பியவரும் ஜாதவேதம் என்ற அக்னிபோல ஒளிநிறைந்தவரும் வேதார்த்தத்தையறிந்தவர்களில் தேர்ச்சிபெற்றவரும் நான்கு வேதங்களையும் ஒருவேதத்தைப்போல எளிதில் அறிந்தவரும் மேலானஞானத்தையுடையவருமான விஷ்ணுகுப்தர் என்பவர் ஒருவரிருந்தார். அவ்விஷ்ணுகுப்தரின் சக்தி மின்சாரத்தின் ஒளியை ஒத்தது. இடியையொத்த அவருடைய ஏற்றெதிர்த்தலால் உலகத்தில் பெரும்புகழ் பெற்றதும் மிக்கவீரமுள்ளதும் மலைபோன்ற கம்பீர முள்ளதுமான நந்தர்களின் சந்ததி வேருடனழிக்கப் பட்டது.

அவர், பலத்தில் சக்திதரனாகிய குமாரக்கடவுளை ஒத்திருந்தார். மேலும் அவர் மந்திரசக்தியினால் அரசர்களுள் முதன்மை பெற்ற சந்திரகுப்தனுடைய அரசாட்சியின் கீழ் இவ்வுலக முழுவதையும் கொண்டு வந்து வைத்தார். அவர் அமுதத்தையொத்த நீதி சாஸ்திரத்தைக், கடலை.யொத்த அர்த்த சாஸ்திரத்திலிருந்து கடைந்தெடுத்தவர். அத்தகைய பெருமைவாய்ந்த விஷ்ணுகுப்தரை வணங்குகின்றேன்.

7—8. பற்பலவிதமான கல்வித்துறைகளில் சிறப்புற்ற அறிவாளராகிய விஷ்ணுகுப்தரால் செய்யப்பட்ட ஸ்மிருதிகளிலிருந்து

ஆராய்ந்து பார்த்து இராஜ்ய பரிபாலனத்தின் விஷயமாகச் சுருக்க மும் இன்றியமையாதனவுமான சிலவற்றை அரசியல் விஷயங்களில் விருப்பமுள்ள நான் அரசர்களுக்கு எடுத்துச்சொல்கின்றேன். நான் சொல்கின்றவை அரசநீதியில் தேர்ச்சிபெற்றவர்களுடைய அறி விற்கு ஒத்திருக்கும்.

9. அரசனே நாட்டிலுள்ள குடிகள்மேம்படுவதற்குக் காரண மாயுள்ளவன். வயது முதிர்ந்த பெரியோர்களும் அவனைக்கௌர விக்கின்றார்கள். சந்திரன் கடலுக்குக்கொந்தளிப்பை யுண்டு பண் ணுவதுபோல்அரசன் குடிகட்குமகிழ்ச்சியை யுண்டுபண்ணுகிறான்.

10. அரசன் குடிகளை நேரான வழியில் செலுத்தாவிட்டால் மீகாமனில்லாத மரக்கலம் கடலிலலைந்து கரைசேராதவாறுபோல அக்குடிகள் தங்கள் வாழ்நாள் முழுமையும் வீணாக்கிக் கொள்வார் கள்.

11. தருமத்துடன் கூடியவனும் தன்னால் கூடியமட்டும் குடி களைக் காப்பாற்றுகிறவனும் பகைவர்களுடைய நாடுகளைப் பிடிக்கிற வனும் ஆகியவரசன் பிரும்மாவைப் போலக் குடிகளுடைய மரியா தைக் குரியவனாகின்றான்.

12. முறைசெய்து காப்பாற்றுதல் என்பது அரசர்களுடைய கடமையாகும் (நாட்டிற்கு க்ஷேமத்தையுண்டாக்கும்) தொழில்கள் அரசர்களுடைய ஆளுகையைப் பொறுத்திருக்கிறது. தொழில் கள் அழிந்து விட்டால் இவ்வுலகம் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தும் உயிரற்றதாக ஆகின்றது.

13. அரசன் (மழைபெய்து உயிர்களைக் காப்பாற்றும்)மேகம் போல் குடிகளுக்கு ஆதாரமாயிருக்கின்றான். அம்மேகம்இல்லாது போயினும் உயிர்கள் ஒருவாறு பிழைத்திருக்கலாம்; அரசனில் லாவிடின் உலகம் நாசத்தையடையும்.

14. அரசன் குடிகளைக்காப்பாற்றிவந்தால் அவர்கள் அரசி யலை விருத்திபண்ணுவார்கள். குடிகள் செய்கையைப் பார்க்கிலும்

அரசனுடைய செய்கையாகிய காப்பாற்றுதல்மேன்மை பொருந்திய தாகும். அரசனுடைய தொழில் இல்லையாயின் மற்றச்செயல் இருந்தும் இல்லாதது போலாம்.

15. அரசியற்குரிய நீதியாகிய ஒழுங்கின்படி நடக்கும் அரசன், அறம் பொருள் இன்பம் ஆகியவற்றைத்தான் அடைவதோடு தனது குடிகளையும் அடையும்படி செய்கிறான். அங்ஙனமின்றி அவன் நீதிதவறி நடந்தால் தனக்கும் தன்குடிகட்கும் கேட்டினை யுண்டு பண்ணிக்கொள்வான்.

16. தருமத்தில் வழுவாது நீதிசெலுத்தியதால் வைஜவனன் என்னும் அரசன் நெடுங்காலம் இவ்வுலகத்தையாண்டு வந்தான். நகுஷன் என்னும் அரசன் நீதிதவறியதால் பாதாளவுலகத்தில் வசிக்கும்படியான சாபத்தை யடைந்தான்

17. ஆதலால், அரசன் எக்காலத்தும் அறத்தின் வழியால் பொருளை ஈட்டல்வேண்டும். அங்ஙனம் செய்வதால் அவனது இராஜ்யம் மிக்க பரப்புள்ளதாகவாகும். இராஜ்யமானது விஸ்தீர்ணத்தில் முன்னேற்ற மடைந்தால் எங்கும் நன்மையே உண்டாகும்.

18. அரசன் அமைச்சன்குடிகள் அரண் கோசம்(பண்டாரம்) ப்படை நட்பாசர் ஆகியஇவை ஏழும் அரசியலுக்கு இன்றியமையாத அங்கங்களாம். அவ்வங்கங்கட்கு உறுதியான அறிவும் ஆற்றலும் இன்றியமையாதனவாம்.

19. அரசன் விடாமுயற்சியுடன் உறுதியான ஆற்றலாலும் புத்திக் கூர்மையாலும் நல்லவழிகளைத் தெரிந்துகொண்டு மேலே கூறிய அங்கங்களை விருத்திசெய்வதற்கு முயற்சிசெய்ய வேண்டும்.

20. அறநெறி வழுவாமல் பொருளையடைவது, அப்பொருளைக் காப்பாற்றுவது காப்பாற்றினதை மேலும் மேலும் வளரச் செய்வது, அங்ஙனம் வளர்த்தபொருளைத் தக்கார்க்கீவது ஆகிய நான்கும் அரசனுடைய கடமைகளாம்.

21. அரசன் ஊக்கமும் அரசியலைக்கூறும் நூல்களில் ஆழ்ந்த அறிவும் ஆற்றலும் ஆகிய இவற்றால் பொருளை உண்டாக்கக் கருத வேண்டும். அரசியலைக்கூறும் நூல்களின் அறிவுவணக்கத்தினாலுண்டாகும்; அவ்வணக்கமும் கல்வியறிவினாலுண்டாகும்.

22. பொறிகளைப் புலன்களின் வழிவிடாமல் அடக்கியாளுவதே வணக்கம் என்று சொல்லப்படும். வணக்கமுள்ளவன் எளிதில் நூல்களைக்கற்றுக் கொள்வான். அதனை ஊக்கத்துடன் கற்பவனுக்கு நூல்களின் மிக நுட்பமான பொருள்கள் தெளிவாகவிளங்கும். அதனால் அவனுக்குச் செல்வம் வளர்ந்தோங்குகின்றது.

23—24. நீதிசாஸ்திரத்தினுண்டாகிய சிறந்த அறிவு, தைர்யம், சாமர்த்தியம், தெளிந்தஅறிவு, மறவாமை, ஊக்கம், சொல்வன்மை, உறுதி, துன்பமின்பம் இவைகள் வந்தபொழுது பொறுமையாக இருத்தல், தெரிந்து தெளிதல், நட்புடையனாயிருத்தல், ஈகை, உண்மையுடைமை, நன்றியறிதல், உயர்குடிப்பிறப்பு, நல்லொழுக்கம், இந்திரியங்களை அடக்கியாளுதல் முதலிய குணங்கள் ஒருஅரசனுக்குச் செல்வத்தை உண்டாக்கும் காரணங்களாம்.

25. அரசன் முதலில் தான் அடக்க முடையவனாயிருந்து கொண்டு பின்னர் அமைச்சரையும் வரவரத் தாழ்ந்த நிலையிலுள்ள மற்றை வினைசெய்வோர்களையும் அடங்கிநடக்கும் வண்ணம்செய்து தன்மக்களையும், அவ்வண்ணமேகுடிகளையும் அடக்க முள்ளவர்களாகச் செய்தல் வேண்டும்.

26. குடிகளால் எப்போதும் விரும்பப்பட்டவனும் குடிகளைக் காப்பாற்றுவதில் ஊக்கமும் தன்னடக்கமும் உள்ளவனுமான அரசன் இயல்பாகவே பெருஞ்செல்வத்தைப் பெறுவான்.

27. காட்டில் அடங்காது திரியும் யானையை வேட்டமாடி அங்குசத்தால் அடக்குவது போலப் பரந்தவிஷயங்களில் அடங்காமல் சென்ற இந்திரியங்களைத் தன் அறிவால் விஷயங்களில் செல்லவிடாமல் அடக்க வேண்டும்.

28. ஆத்மா பொருளை ஈட்டும் வண்ணம் மனத்தைத் தூண்டு கிறது. ஆத்மாவும் மனமும் ஒன்று சேர்ந்தபொழுது ஆசாசக்தி என்பது உண்டாகிறது.

29. மனமானது அருவருக்கத்தக்க மாமிசத்தை ஒத்த சிற்றின்பத்தில் நோயாகிய ஆசாசக்தியினால், இந்திரியங்களைப் பிரவேசிக்கும்படி செய்கிறது. இங்ஙனம் மனத்தின்கண் எழும் வேட்கையைச் சதுரப்பாட்டுடன் அடக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்திரிய ஜயம் என்பது உண்டாகும்.

30. விஞ்ஞானம் ஹிருதயம் சித்தம் மனம் புத்தி ஆகிய இவைகள் ஒரே பொருளைக் குறிக்கும் பலபெயர்களாம். ஆத்மாவானது மேலே கூறியவைகளில் ஒன்றுடன் கலந்து மனதிற்குப் பிரவிர்த்தியையும் நிவிர்த்தியையும் உண்டு பண்ணுகிறது.(அதாவது மனம் தொழிற்படும்படியும் அஃதின்றியிருக்கும்படியும்செய்கிறது.)

31. சிரத்தையுடன் செய்தல் சிரத்தையின்றிச் செய்தல் இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முயற்சி மன தில்தோன்றுவனவற்றை உணர்வது தன்வாழ்நாளில் முன்நடந்தவற்றை நினைப்பது ஆகிய இவைகளால் ஆன்மா ஒன்று உண்டெனத்தெளிவாகின்றது.

32. பற்பலவிதமான உணர்ச்சிகள் ஒன்று சேர்ந்திருக்க முடியாத தன்மையால் மனம் ஒன்று உண்டென விளங்குகின்றது. பற்பல விஷயங்களிலும் இவ்வாறு செய்வேன் என்று நினைத்தல் மனத்தின் தொழிலாம்.

33. காது, மெய், கண், வாய், மூக்கு இவ்வைந்தும் ஞான இந்திரியங்கள் ஆம். பாயு உபஸ்தம் கைபாதம் வாக்குஇவ்வைந்தும் கர்மேந்திரியங்கள் ஆம். இவைகளே இந்திரியங்கள் எனப்படும்.

34. சப்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் இவ்வைந்தும் ஞான இந்திரியங்களின் விஷயங்களாம். மலங்களைக் கழித்தல் இன்பத்தை உண்டாக்குதல் வாங்கிக்கொள்ளுதல் நடத்தல் பேசுதல் இவ்வைந்தும் கர்மேந்திரியங்களின் தொழில்களாம்.

35. அநுபவம் வாய்ந்த பெரியோர்கள், ஆத்மாவும் மனமும் அந்தக்கரணமாகும் என்று கூறுகின்றனர். இவ்விரண்டும் தொழில் பட்டு ஒன்று சேருவதால் ஆசாசக்தியுண்டாகின்றது. (அந்தக் கரணம் உள் இந்திரியம்.)

36. சரீரம், (கர்மேந்திரியங்கள்) ஞானேந்திரியங்கள் 'அவற்றின் விஷயங்கள் ஆகிய இவைகள் சரீரத்தின் புறத்திலுள்ள கருவிகள் என்று சொல்லப்படுகின்றன. ஆசாசக்தியினாலும், இந்திரியங்களுடைய சக்திகளாலும் மேற்கூறிய அகக்கருவி, புறக்கருவி ஆகிய இவ்விரண்டும் உண்டு என்று தெரிகின்றன.

37. இவ்விரண்டு கருவிகளும் (ஆத்மாவின் முயற்சியால்) தமது தொழில்களில் பிரவிர்த்திக்கின்றன. ஆத்மா (யோகாப்பியாசம் ; முதலிய வற்றால்) தன்முயற்சியை நிறுத்துமாயின், மனம் அடக்கமுடையதாக ஆகும்.

38. நியாயம் அபநியாயம் ஆகிய இவற்றை யறிந்த அரசன் மேற்கூறிய வண்ணம் இந்திரியங்களின் சாமர்த்தியத்தால் தன்னடக்கமுடையவனாக இருந்து தனக்கு நன்மையைத் தேடிக்கொள்ள வேண்டும்.

39. தன் மனமொன்றை அடக்க முடியாத அரசன் சமுத்திரத்தால் சூழப்பட்ட இவ்வுலகத்தை எவ்விதம் அடக்குவான்?

40. மனதைக் கவரும் தன்மை வாய்ந்தனவும் காரியத்தின் முடிவில் இரசத்தை இழப்பனவும் ஆகிய விஷயங்களால் இழுக்கப்பட்ட அரசன் படுகுழியில் வீழ்ந்த யானைபோலப் பிறர்வசமாவான்

41 ஓர் அரசன் அகாரியங்களில்பற்றுள்ளவனுயிருத்தலாலும் விஷயங்களால் மதிமயங்கினவனுயிருத்தலாலும்போரச்சத்தைவிளைக்கக் கூடிய ஆபத்தைத் தானே உண்டு பண்ணிக் கொள்கின்றான்

42 சப்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் ஆகிய இவைவ் ஒவ்வொன்றுமே அரசனுடைய கேட்டிற்குக் காரணமாக ஆகும்

43 புதுப்புல், முளை இவைகளை மேய்கின்றதும் மிக்க தூரம் தாண்டிச்செல்லக் கூடியதும் ஆன கபடமற்றமான், வேடுவனுடைய இன்பமான பாடலால் தனக்கு நாசத்தை உண்டு பண்ணிக் கொள்கிறது

44 இமயமலையை ஒத்த சரீரத்தை யுடையதும் விளையாட்டாக மரங்களைப் பிடுங்கி யெறியும் வல்லமை பொருந்தியதும் ஆகிய ஆண்யானை பெண்யானையின் ஸ்பர்சசுகத்தினால் மதிமயங்கிக் கட்டுக்குள்ளாகிறது.

பத்திராசிரியர்.

(கதாசரித் சாகரம்)

வரருசிசரிதம்.

கௌசாம்பி என்னும் நகரில், அக்னிசிகன் என்றும், சோமதத்தன் என்றும் பெயர்வாய்ந்த மறையவர் ஒருவர் இருந்தார். அவருக்கு வசுதத்தையென்னும் பெயருள்ள மனைவி யொருத்தியிருந்தாள். இவ்விருவருக்கும் ஓராண்குழந்தை பிறந்தது. அதற்கு வரருசியென்றும் காத்தியாயனர் என்றும் பெயரிட்டு வளர்த்துவந்தனர். வரருசி, குழந்தையாக இருக்கும் பொழுதே சோமதத்தன் பரகதியடைந்தார். வரருசியும் தாயார்வசுதத்தையும் தலைவர் இறந்த பிறகு மிக்க வறுமை நிலைமையை யடைந்தனர். வசுதத்தை, தன்குழந்தை வரருசியைக் கல்வி கற்பிக்க முடியாத தன்மையிலிருந்தனள்.

அப்பொழுது அவர்களுடைய இருக்கைக்குவேதியரிருவர் தூரதேசத்திலிருந்து வந்தனர். அவர்கள் வியாடி என்றும் இந்திரதத்தன் என்றும் பெயர் பொருந்தியவர்கள். தங்களுடைய வீட்டிற்கு அதிதியாக வந்த அவர்களை வசுதத்தை விருந்திட்டுபசரித்தாள். அவர்கள் அவளுடைய உபசாரத்தால் களைப்பு நீங்கியிருக்கும் பொழுது, தெருவில், பறையின் அரவம் கேட்டது. அதனைக்கேட்ட வசுதத்தை வரருசியை நோக்கி "குழந்தையே, உன்னுடைய தந்தையின் தோழனான நந்தன் என்னும் அரசன், இன்று ஒருநாடகம் நடிக்கப்போகின்றான் என்பதை இப்பறையரவம் குறிக்கின்றது" என்றாள். அதனைக்கேட்ட வரருசி "தாயே நான்,

இன்றிரவு நடனசாலை சென்று அங்குநடக்கும் காட்சிகளைக் கண்டு நடந்ததை நடந்த வண்ணமே உன்னிடத்தில் வந்து கூறுவேன்'' என்று கூறினான். அவன் அங்ஙனம் கூறியதுவியாடிக்கும் இந்திரதத்தனுக்கும்வியப்பையுண்டாக்கிற்று. அதனையறிந்த வசுதத்தை அவர்களைநோக்கிச் "சிறுவர்களே,இவன் நுட்பமான அறிவுள்ளவன். எதனையும் ஒரே முறையில் கிரஹித்துக் கொள்வான். அவன் அங்ஙனம் கூறுகின்றனே யென்று நீங்கள் வியப்படைய வேண்டாம். இது உண்மை'' என்று கூறினள். அவர்கள் வரருசியினுடைய கூர்த்தமதியினை அறிவதன்பொருட்டு வேதத்திலுள்ள ஒரு சிறுபகுதியாகிய 'பிராதிசாக்கியம்' என்பதை அவருக்கு ஒருமுறை சந்தை கூறினர்கள். மறுமுறையில் அவன்தெளிவாக அதனையொப்பித்தான். அதனால், அவர்கள் வரருசியை 'ஏகசந்தக்கிராஹி' என்று மதித்து மகிழ்ந்தார்கள். பின்னர் அவர்கள்மூவரும் அரங்கமேடை சென்று அவ்விடத்திலுள்ள காட்சிகளைக்கண்டு திரும்பி வீடுவந்து சேர்ந்தனர். வரருசி முதல்நாள் இரவில் நாடக மேடையில் நடந்தவற்றை ஒன்றும் விடாமல் அவ்விதமே தம்தாயாருக்குக் கூறினர்.

வியாடியும் இந்திரதத்தனும் வரருசியினுடைய அறிவினை வியந்து வியாடியென்பவன் வரருசியினுடைய தாயாரைநோக்கித் "தாயே, நாங்கள் இந்நாள்வரையிலும் இத்தகைய அறிவுள்ளவன் ஒருவனையே நாடித் திரிந்து கொண்டிருந்தோம்; இன்று எங்கள் எண்ணம் நிறைவேறிற்று நாங்கள் இருவரும் வேதசம் என்னும் நகரிலிருந்த சகோதரிவருடைய புதல்வர்கள்; நாங்களிருவரும் சிறுவர்களாக இருக்கும் பொழுதே எங்களுடைய பெற்றோர்கள் பரகதியடைந்தார்கள். நாங்கள் தனிமையாக வாயினேம். பின்னர் எங்களுக்கு வயசுவந்தபொழுது நாங்கள் எங்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் வேண்டும் என்று குமாரக்கடவுளைக்குறித்துத் தவம் செய்தோம்; எங்கள் தவத்திற் குகந்த குமாரக்கடவுள் எங்களுடைய கனவில் தோன்றி 'நீங்கள் பாடலிபுரத்திலுள்ள வர்ஷர்என்பவரை யடைந்து கல்விகற்று அறிவுள்ளவர்களாக ஆகுக; அவர் நமதருளால் எல்லாக்கல்விகளையும் பெற்றிருக்கிறார்' என்று கூறியருளினர்;நாங்கள் அவ்விதமே பாடலிபுத்திரம் சென்று வர்ஷருடைய கிரஹத்தை விசாரித்து அறிந்து அங்கே சென்று அவரை வணங்கி எங்கட்குக் கல்வி கற்பிக்குமாறு வேண்டினம்; அவர் இயற்கையில் மூர்க்கர் என்றும்,அவர் தாம் எல்லாக் கல்விகளிலும் வல்லவராக வேண்டும் என்று குமாரக் கடவுளைக் கருதித் தவமிருந்து அவரால் ஒருமுறை கூறிய மாத்திரத்தானே எல்லாக் கல்விகளையும் கிரஹித்துக்கொள்ளும் வல்லமை வாய்ந்த வேதியச் சிறுவனொருவனுக்குக் கற்பிக்கும் பொழுது எல்லாக்கல்விகளும்

அவருக்குத் தெளிவாகத் தோன்றும் என்று வரம் பெற்றிருப்பதாகவும் அவருடைய மனைவியால் அறிந்தோம்; எங்களுக்கு ஒரேமுறையில் கிரஹித்துக் கொள்ளும் வல்லமையில்லை; இரண்டு முறையிலும் மூன்று முறையிலும் கிரஹித்துக்கொள்வோம்; தாயே,உம்முடைய வரருசி ஒரே முறையில் ஏற்றுக்கொள்ளும் தன்மை வாய்ந்தவராக விளங்குகின்றார். இவருக்கு வர்ஷர் கல்விகற்பிப்பதன் வாழியாக நாங்கள் அவர் அறிந்துள்ள எல்லாக்கல்விகளிலும் வல்லவராவோம்; இவரை எங்களுடன் வரச் சொல்லவேண்டும்'' என்றுகூறிகேட்டனர்.

அதற்கு வரருசியின் தாயார், ''சிறுவர்களே, இப்புதல்வன் எனக்குப் பிறந்தவேளையில் ஆகாயத்தில் அசரீரிதோன்றி இவன் வர்ஷர் என்பவரிடத்திலிருந்து ஒரே முறையில் எல்லாக் கல்விகளையும் கற்றுப்புகழ் பெறுவான். அன்றியும் வியாகரணத்தில் வல்லவனுக ஆவான். சிறந்த பொருள்களை இவன் அறிவிற்குப் பொருந்துவனவாகும் ஆதலால் இவனுக்கு வரருசியென்று பெயரிட்டழைக்க, என்று கூறி மறைந்தது. இப்பொழுது நீங்களும் இவனை வர்ஷரிடத்திற்கு அழைத்துக்கொண்டு போவதாகக் கூறுகின்றீர்கள். எல்லாம் தகுதியுள்ளனவாகவேயிருக்கின்றன. இவனை உங்களுடன் அழைத்துப்போகலாம்'' என்று கூறினுள்.

பின்னர் இந்திரதத்தன், வரருசிக்குக் குருவினிடமிருந்து வேதம் முதலியவற்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுண்டாகும் வண்ணம் உபநயனம் என்னும் சடங்கைச்செய்வித்து அவ்விருவரும் வரருசியுடன் வர்ஷருரையடைந்தனர். வர்ஷர் வரருசியைக்கண்டவுடன் மகிழ்ச்சியடைந்து தனக்குக் குமாரக்கடவுள் அருளியவரத்தின் வண்ணமே வரருசியை ஏகசிந்தக்கிராஹி என்று அறிந்து அவனுக்கு எல்லாவேதம் வேதாங்கம் கலைகள் முதலியயாவற்றையும் கற்பிக்கத்தொடங்கிமுதலில் ஓங்காரத்தை மிகத்தெளிவாக உச்சரித்தார். அப்பொழுது அவருக்குச் சாஸ்திரங்கள் யாவும் எதிரில் நிற்பது போலத் தெளிவாகத் தோன்றின. அவர் வரருசிக்குக் கற்பிக்கையில் வர்ஷர் ஒருமுறை கூற மறுமுறை வரருசி எல்லாவற்றையும் கற்றுக்கொண்டார். அவ்விருவரும் கூறிய இருமுறையில் வியாடி எல்லாக்கல்விகளும் வரப் பெற்றுன், இம்மூவரும் கூறிய மூன்று முறைகளிலும் இந்திரதத்தன் எல்லாக்கல்விகளுக்கும் தலைவனுக ஆயினன். இவ்விதமாக அவர்கள் யாவரும் ஸ்ரீகுமாரக்கடவுளுடைய நல்லருளால் எல்லா வித்தையும் பெற்று இன்பமெய்தினர். இவ்வரலாறு அப்பாடலிபுத்திரம் முழுதும் பரவிற்று. அங்கே அரசனுயிருந்த நந்தனுக்கும் அவ்வரலாறு தெரிந்தது. அதனுல் அவன் மகிழ்ச்சி கொண்டு

அளவிறந்த பொருள்களைவாரி வர்ஷருக்குக் கொடுத்து அவருடையயிறுதியான வாழ்நாளை வருத்தமின்றிக் கழித்து வருமாறு செய்தான்.

இங்ஙனம் வாருசியும் வியாடி இந்திரதத்தர்களும் குருகுலத்தில் வாழ்ந்துவருங்காலையில் பாடலிபுத்திரத்தில் இந்திரனைக்குறித்து விழாக் கொண்டாடப்பட்டது. அம்மாணவர்கள் மூவரும் அவ்வுத்ஸவத்தைக் கண்டுகளிக்க நகரத்தின் நாலாபக்கங்களிலும் திரிந்துகொண்டிருந்தனர். அப்பொழுது மிக்க அழகுவாய்ந்த மங்கையொருத்தியை வாருசிகண்டு அவளழகில் ஈடுபட்டுத் தன்னுடைய தோழனான இந்திரதத்தனிடத்தில் தன்மனத்தினைக் கொள்ளைகொண்ட மங்கை யாருடையமகள் என்றுவினவினார். அதற்கு இந்திரதத்தன், 'நண்பனே, இவள் உபகோசையென்று பெயர்வாய்ந்தவள்; நமது ஆசிரியரான வர்ஷருக்கு உடன்பிறந்த உபவர்ஷருடைய மகள்'' என்று கூறினான் வாருசி அதனைக்கேட்டுக் காதல் வயப்பட்டு அவளையே தாம் மனைவியாகஅடைய வேண்டும் என்று கருதித் தம் வீட்டையடைந்து அன்றிரவை அரிதிற்கழிப்பாராயினர்.

வரருசி உபகோசையைக் கண்டு காதல் கொண்டதுபோலவே; உபகோசையும் வாருசியிடத்தில் மிக்க காதல்கொண்டு தோழியர்களால் வரருசியை யாவர் என்று அறிந்துகொண்டுதன்வீட்டையடைந்து அன்றிரவெல்லாம் துயிலின்றிவருந்தித் தவித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளுடைய தோழியர்கள் அவளைப்பல உபசாரங்கள் செய்து ஆற்றவும்அவள்காமநோய்க்கு ஆற்றாளாகிவாடிமெலிவாளாயினள்.

மறுநாள் காலையில் தோழியொருத்தி வரருசியை யடைந்து தன் தலைவி உபகோசைபடும் பாட்டைக்கூறிஅவளைமணந்தருளுமாறு வேண்டினள் அதற்கு வரருசி, "பெண்ணே, அவளை மணந்து கொள்வது எனக்கு உடம்பாடேயாயினும் எங்களிருவருடைய பெற்றோர்களும் உடம்பட்டு மணம் செய்விக்க வேண்டாவோ" என்று கூறினர். அத்தோழி, அவர் கூறிய அதனையே அவர்உடம்பட்டதாகக் கருதிச் சென்று உபகோசையின் தாய்க்கு நடந்தவற்றைத் தெரிவிக்க அவள் தன் கணவராகிய உபவர்ஷருக்குத் தெரிவித்தாள். அவர் தம்முடன் பிறந்தவராகிய வர்ஷருக்கு அறிவிக்க அவர்உபகோசைக்கும்வரருசிக்கும் கடிமணம் செய்விப்பதாகக் கூறி இந்திரதத்தனால் வாருசியின் தாயாரை யழைத்துவந்து இவ்விஷயத்திற்கு அவளுடன்பாடும்பெற்று வரருசிக்கும் உபகோசைக்கும் திருமணத்தை நிறைவேற்றினார். வரருசி தமக்குக் கலியாணமானபிறகு தம் தாயார் மனைவி இவர்களுடன் அந்நகரிலேயே இன்பமாகக் காலங் கழித்து வந்தனர்.

இஃதிங்ஙனமாக, வர்ஷருடையபுகழானதுஎங்கும்பரவவே அவ்விடத்தில் பலஇடங்களிலுமிருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்கத்தொடங்கிஞர்கள். அவருடைய மாணவர்கள் பலருள்ளும் பாணினி என்று பெயர் வாய்ந்தவர் ஒருவர் இருந்தார். அவர் மழுங்கிய அறிவுடையராக இருந்தமையால் தம் ஆசிரியர் கூறுவனஒன்றும் அவர் அறிவை அடைய வில்லை. அவர் ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகள் எல்லா வற்றையும் செய்து ஆசிரியரை மகிழ்வித்து வந்தார். என்னசெய்தும் அவருடைய அறிவிற்குக்கல்விஏறவில்லை. அதனுல்மாணவர்கள் அவரை இகழ்வாராயினர். அப்பொழுது வர்ஷருடைய மனைவி பாணினியை நோக்கி "அப்பனே, நீ கைலைமலை சென்று பரமசிவனைக் குறித்துத் தவங்கிடந்து அவரருளால் கல்வியறிவுள்ளவனுக ஆவாய். நீ,இப்பொழுதே கைலைமலைக்குச் செல்க" என்று கூறிஞள். அங்ஙனமே பாணினி இமயமலை சென்று பரமசிவனைக்குறித்துத் தவமிருந்தார். பரமசிவன் அவர்தவத்திற்குகந்து அவருக்கு வடமொழி வியாகரணத்தை (இலக்கணத்தை) அனுக்கிரஹம் செய்தார். அவ்விலக்கணம் பாணினியின் பெயரால் பாணினீயம் என்று அழைக்கப்பெறுகின்றது. பரமசிவன் அருள்பெற்ற பாணினிவர்ஷரிருக்கும் இடம் வந்து அவருடைய மாணவர்களுள் முதன்மைவாய்ந்த வருசியையே வாதக்கு அழைத்தார். அவ்விருவருக்கும் வெற்றி தோல்வியின்றி ஏழுநாட்கள் வாதப்போர் நிகழ்ந்தது. எட்டாம் நாள் பாணினி வருசியினுல் பெரும்பாலும் வெல்லப்பட்டு விட்டார். அப்பொழுது பரமசிவன் பாணினிதம் அருள்பெற்றவர் என்னும் காரணத்தினுல் ஆகாயத்தில் அசரீரியாக நின்று "பாணினியின் வியாகரணத்தை மிஞ்சிய வியாகரணங்கள் பாணினீயத்திஞல் இன்றுமுதல் வெல்லப்பட்டன" என்று கூறினர்.

பத்திராசிரியர்.

விடுகதை வினு.

அலைபெற்ற கடலாடை புவிமெச்சு புலவரே
அக்கரத் தொன்ப தோர்பேர்
ஆதியும் மேழுமுற ஆகாய மேகமாம்
ஆறுமுத லைந்து மேழும்
நிலைபெற்ற வுச்சியாம் நீணுன்கி ரண்டுமே
நிதியொத்த வாறு தாவே

நேர்பெற்ற வெட்டொன்று மைந்துமே மூஞ்சேசு
நீதிவேம் பன்றன் கொடியே
கலைபெற்ற சந்த்ரனெனக் கருத வந்திடுங்
காணுமெட் டும்மி ரண்டும்
கானகவி லங்கிலதி தந்திரச் சம்புகன்
கவியுநான் மூன்ற தாமே
விலைபெற்ற வேழமாம் விளம்பாதி மூன்றுமே
விரும்பு மானிட னுமமே
வீறுநான் கைந்துகடை யாகுமிப் பெயரதனைச்
சொல்ல வும்வேண்டி னேனே

மாயன் பதியாகும் மன்னுமுத னீங்கமலை
நேய நடுவகல நீதிமன்—சேயிழையே
அக்கரங்கள் மூன்றணுக ஆகுமோர் தானியமே
இக்கதையி னுட்பொருளென் னே.

"மாணவன்"

சம்பகமாலினி. *

—o—o—

அங்கம்—1] [காட்சி—1

இடம்—கலிங்கதேசத்தில் ஓரடர்ந்தகாடு
காலம்—சாயங்காலம் சுமார் 5–30 மணி
பாத்திரங்கள்.—ஜயசிம்மன், பிரஹந்நளை, வீரர்கள்.

[ஜயசிம்மன் பிரவேசம்.

---

* இது சு. ஸ்ரீநிவாசஐயங்காரால் திருத்தப்பட்டது.

ஜயசிம்:—(தனக்குள்) நான் ஓர் இராஜ குமாரனும். நான் தாயென நினைத்திருந்தவள் என்னை எடுத்து வளர்த்த செவிலித் தாயாம்; பெற்ற தாயல்லவாம். என்ன வியப்பு! என்வரலாற்றை நான் அறிந்து கொள்ளுமுன் அவ்ளும் இறந்து பட்டாள். அவ்விஷயமாக நான் எவ்வளவு நினைத்துப் பார்த்தும் ஒன்றும் புலனாகவில்லையே. ஆயினும் அவளிறக்கும்முன் நான் எனக்குரிய பதவியை யடைவதற்கு இரண்டு அடையாளங்கள் கூறியுள்ளாள். அவற்றுள் ஒன்று என்முதுகிற் காணும் பாநத மச்சமாம். மற்றொன்று என்கைவிரலில் அணிந்திருக்கும் மோதிரம் ஆம். இவற்றால் நான் எவ்வாறு என் குடிப்பிறப்பைக் கண்டறிவது. கண்ணைக் கட்டிகாட்டில்விட்டதுபோலிருக்கிறதே.(வெளிப்படையாக) ஏதோ ஒருசப்தத்தை உற்றுக் கேட்பதுபோல் அபிநயிக்கின்றான்.

[அவ்வனத்தின்ஒருபக்கத்திலிருந்து அபயம் அபயம் என்று கூவும் ஒரு பெண்ணின் குரல் கேட்கின்றது. அக்குரல் வந்தவழியில் ஜயசிம்மன் சென்றுபார்க்கிறான். ஒருபெண்ணை இருவர்வழிமறித்துத் தூக்கிச்செல்லப் பார்க்கிறார்கள். ஜயசிம்மன் அவர்களை வெருட்டி அப் பெண் மணியை விடுவிக்கின்றான். அவள் மூர்ச்சையாகிக்கீழே விழுகின்றாள். ஜயசிம்மன் அருகிலிருந்து தண்ணீர் விரைந்து கொண்டு வந்து அவள் முகத்தில் தெளித்து மூர்ச்சைதெளிவிக்கின்றான்.]

பெண்—[சிறிதுகண்ணை விழித்துத்தீனசுரத்துடன்]ஐயோ! எனக்குத் துன்பம் செய்யாதீர்கள். நான் சத்தம் போடவில்லை விட்டு விடுங்கள்.

ஜய—பெண்ணே! பயப்படவேண்டாம் அத்துஷ்டர்களை அடித்துத் துரத்தி விட்டேன். அவர்களால்உனக்கு இனி எவ்விதத் தீங்கும் உண்டாகாது.

பேண்—[அவன் முகத்தைச் சிறிதேநிமிர்ந்து பார்த்துப் பின் வெட்கத்தால் தலை குனிந்துகொண்டு]

ஐய! என்னை அவர்கள் கையினின்றும் விடுவித்த உமக்கு யாது கைம்மாறு செய்வேன்? உமக்கு என் வந்தனையைச் செலுத்துகின்றேன்

ஜய—பெண்ணே! இனிநாம்இவ்விடத்தில்காலந்தாழ்த்தல்கூடாது. உன் வரலாறு யாது? எங்குச் செல்லவேண்டும? இப்பொழுது இவர்கள் துன்பம் செய்யக்காரணம் யாது? தெரிவித்தால் நான் அவ்விடத்தில் உன்னைக் கொண்டுபோய் விட்டுவிட்டு என்னிடம் செல்வேன்.

பேண்—ஐய! இனி எனக்கு வீடேது? வாசலேது? நான் திரும்பவும் என் தந்தையார் கிரஹத்திற்குப் போவதனால் எனக்குத் துன்பமேயொழிய இன்பமில்லை

ஜய—நீகூறுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே தந்தையார் வீட்டில் இன்பமில்லாமலிருக்குமோ?

பேண்—ஐய! அவ்விதம் கூறலாகாது. எனது நிலைமையைநீங்கள் அறியமாட்டீர்கள் நான் உயிருடன் இவ்வுலகில் வாழ்வதனால் யாது பயன்? அக்கொடியோர்கள் என்னைக் கொன்றிருந்தால் மிக்கநலமாக இருந்திருக்கும். வெள்ளங் கொண்டோடும் ஒருநதியின் நடுவில் படகு கவிழத் தத்தளிக்கும் மனிதனுக்கும் எனக்கும் வேறுபாடில்லை. நான் பிறந்தது முதல்இந்நாள் வரையில் என் தந்தையார்வீட்டையன்றி வேறிடமறியேன். அங்கே போவதற்கு இனியான் எண்ணமாட்டேன் அதைக் காட்டிலும் எவர்கையாலும் இவ்விடத்தில்மடிய உடன்படுவேன்.

ஜய—சிவ! சிவ! பெண்ணே! நீ இவ்வாறு பேசுவது தகுதியல்ல. உன் தகப்பனாரிடம் நீசெல்லவேண்டும் என்பதுஎன்எண்ணமல்ல. நீ உன் எண்ணத்தின் வண்ணம் எங்கும்செல்லலாம் இப்பொழுது இங்கே காலந்தாழ்ப்பதால் நம்மிருவருக்கும் தீங்கு விளையும் என்பது திண்ணம். இக்காட்டிற்கு அருகிலுள்ள நகரத்தையடைவோம். அங்கே நாம் சாவகாசமாகப் பேசிக்கொள்வோம்; வருக. செல்வோம். [இருவரும் அக்காட்டில் பேசிக்கொண்டே செல்கின்றனர்.]

பேண்—வீரபுருஷ! எவ்விதமாயினும், நீர் என்னைப் பற்றிக் கெட்ட எண்ணம் கொண்டிருக்கலாம். நீர் அவ்விதம் எண்ணலாகாதென நான் மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜய—பெண்ணே! நான் அப்பொழுதே கூறினேனே. உனக்கு நான் உதவிசெய்ய நேர்ந்ததைத் தவிர உன்னிடம் வேறு அந்நியோந்நியம் பாராட்டவில்லை. அங்ஙனமாக, நான் உன்னைப்பற்றி வேறு எவ்வித எண்ணமும் கொள்ளவில்லையென்று உறுதியாகக்கூறுவேன்.

பேண்—ஐய! நான் ஒருபெண்பேதை, நான் சொல்வதைக்குறித்து நீர் கோபம் கொள்ளல் கூடாது. என்னைப்பற்றி நீர் ஏன் கவலையெடுத்துக்கொள்ளல் வேண்டும்? உமது மனத்தைப் புண்படுத்திக்கொண்டு நான் உம்முடன் கூட ஏன்வரவேண்டும்? நீர் சுகமாகப்போய்வருக. நான் எக்கதியடைந்தாலென்ன?

[சற்றுப் பின்தங்குகிறாள். ஜயசிம்மன் அவளை உடனழைத்துக்கொண்டு]

ஜய—பெண்ணே! ஏன் இவ்வளவு மனவருத்தம். நான்தவறாக ஒன்றும் கூறவில்லையே.

பெண்—நானும் தவறாக ஒன்றும் கூறவில்லையே. முன்பின்னறியாத ஒரு பெண்ணைப்பற்றி நீங்கள் ஏன் சிந்திக்கவேண்டும்? நான் இதற்குமுன் எவ்வித நடத்தையுள்ளவள் என்பதை நீர் அறிவீரா? நானோ நாமோர்நகரத்தையடைந்தபின் என்னைப் பற்றி எவரேனும் வினவ நேர்ந்தால் நீர் யாது கூறுவீர்? அதன்பொருட்டே நான் என்வரலாற்றைக் கூறுவேன் என்றால் நீர் செவிகொடுத்துக் கேட்கஉடன்பட வில்லையே.

ஐய—பெண்ணே! உனக்கு அதனால் மனவருத்த மில்லையெனின் நான் கேட்கச் சித்தனாயிருக்கின்றேன். நீ மிகவும் துன்ப முற்றதாக நான் எண்ணியதால் உன் வரலாற்றைக் கேட்டு மேலும் துன்பமுறுத்துவானேன் என்று அவ்விதம் கூறினேன்.

பெண்—ஒருவர் தாமுற்ற துன்பத்தைப் பிறரிடம் கூறி மனமாற வேண்டும் என்ற கொள்கையின்படி என்னை ஓர் பெரிய ஆபத்தினின்றும் விடுவித்த தம்மிடம் என் வரலாற்றைக் கூறிஎன் துயரத்தைநிவர்த்திசெய்துகொள்ளவிரும்பினேன். அதனைத்தம்மிடம் சுருக்கமாகக்கூறி விடுகிறேன். நானிருப்பது கலிங்கதேசம். என் தந்தையார் அத்தேசத்துப் பிரபுக்களுள் தலைமை வாய்ந்தவர். என் தாயார் ஒருத்தி உண்டென்பதையே நானறியேன். என்பெயர் பிரஹந்நளை நான் சிறுபிராயம் முதல் எனக்கு மாற்றாந்தாயாகிய ஓர் கொடும்புலியின் கையகப்பட்டு வருந்தினேன். ஆயினும் நான் எனது துன்பங்களை என் தந்தையாரிடத்தும் கூறாது மறைத்து வைத்திருந்தேன். இங்ஙனமாக, நான் ஒரு நாள் நந்தவனத்தில் உலாவிக்கொண் டிருக்கும் வேளையில் காதலரிருவர் நடந்து கொள்ளும் பாவனையாக இருவர் வெகு உல்லாசத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவ்விருவரில் ஒருவர்குரல் என்சிற்றன்னையின் குரலாக எனக்குத்தோற்றியமையால் நான் ஐயங்கொண்டு ஒரு புதரின் மறைவில் மறைந்துநிற்க, என்சிற்றன்னையும் மற்றொருவரும் வெகு உல்லாசமாக வருவதைக் கண்டேன்.

நான் இருக்குமிடம் நெருங்கியபின் அவ்விருவரும் அங்கிரு ந்த ஒரு சலவைக்கல்லின் மீது உட்கார்ந்து கொண்டு சர சல்லாபமாகக் காலம் கழித்தார்கள். அத்தகாதசெயலைக் கண்டதும் என் மனம் கொதிக்க நான் மறைவினின்றும் நீங்கி என் சிற்றன்னையின் தகாத செயலைக் கண்டித்தேன். அன்றுமுதல் இன்றுவரை என் துன்பங்கள் பொறுக்கமுடி யாதனவாக ஆயின. சிலநாட்செல்ல என் சிற்றன்னையின் கள்ளக்காதலர் என்னை மணம்புரிந்து கொள்ள விரும்பிஎன் தந்தையாரை வேண்டினர். அதற்கு அவர் என் னை யழைத்து என் சம்மதத்தைக்கேட்க, நான் அவர் எண் ணத்திற்கு ஒத்து வாராததால் என்மேல் கோபம் கொண் டார். அவர், அரசவம்சத்தைச் சேர்ந்தவர் என்றும் அவ ரைப் போன்ற கணவன் எனக்குக் கிடைப்பது அரிது என் றும் நான் அவரையே மணஞ்செய்து கொள்ளவேண்டும் என்றும் என் தந்தையார் என்னை மிகவும் வற்புறுத்தினர். நான் துக்கம் பொறுக்க முடியாமல் அன்று பூஞ்சோலையில் நடந்த கள்ளக்காதலின் வரலாற்றை என் தந்தைக்குக்கூறத் தொடங்குகையில், என் சிற்றன்னை என்னைத்தடுத்து என் பிதாவையும் உடனழைத்துச் சென்று விட்டாள். பிறகு அவள் ஓரே பிடிவாதமாய் நான் அவருக்கே மாலையிட வேண்டும் என்று வற்புறுத்தி என்னைச்சிறையிடச்செய்தது மன்றி நான் சிறையிலிருக்கையில் அவளும் அவள் கள்ளக் காதலனும் எனது செருக்கையடக்கி வேசியாகச் செய்து துரத்திவிடுவதாகச்சபதமும்செய்தார்கள். நான் அவ்வசைக்கு உள்ளாகக்கூடாதுஎன்றுகருதிச்சிறைக்காவலர்களின் உதவி யைக்கொண்டு சிறையினின்றும் தப்பிவிட்டேன். இதனை யறிந்த எனது தந்தையார் என்னைத்தேட நான்குபக்கங்களி லும் ஆட்களைவிடுத்தனர். அவர்களிருவர் என்னைத் தொடர்ந்து வந்து, என்னைத்திரும்பி நகரத்திற்கு வருமாறு அழைக்க நான் மறுத்தேன். அப்பொழுது அவர்கள் என் னைப் பலவந்தமாகக் கட்டியிழுத்துத் தும்பமுறுத்தினர். அதனைப் பொறுக்காமல் நான் கூக்குரலிட்டேன், அதனைக்

கேட்டு வந்து தாங்கள் உதவிசெய்தீர்கள். இதுவே என் வரலாறு. இனித்தாங்கள் என்னைப்பற்றி எவ்விதமும் நினைத்துக் கொள்ளலாம். நான் மாத்திரம் என்னை ஆபத்தில் காப்பாற்றிய அருளுடையவர் என்று தங்களை நினைத்துக் கொண்டிருப்பேன்.

[நீடித்துப் பேசியதால்சிரமம்கொண்டவள் போல அபிநயிக்கின்றாள்.]

(தொடரும்)

K. இராமநாதையர்
வக்கீல், சாத்தூர்.

நல்லிசைப்புலவர் கவித்திறம்.

திசைகள் யாண்டுஞ் சூழ்ந்தாழ்ந்து பரந்துகிடக்கும் சொற்பாற்கடலைத்தமது தோலாநா வெனுமத்தாற்கடைந்து கோதொரீஇ அமுதங்கொண்டு உலகிற்கூட்டி இசைநிறுவிய புலவரேநல்லிசைப் புலவராவர்.

அவருடைய கவிகள், கண்டார் மனங் கவருங்கவினும், கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியுஞ்சொல் தன்மையும், அதற்கேற்பப் பொருட்பொருத்தமும்,இலக்கணவமைதியும்உடையதாயிருக்கின்றமையால் அவைநின்றுநிலவுகின்றன.இத்தகைய வாய்ப்புடைத்தாய் அவை நின்று நிலவுகின்றமைக்குக் காரணம் யாதெனின்? கூறுதும்; தொல்நூல் முதலிய நன்னூல் பலவற்றையும் முற்றப்பயின்று முட்டின்றுணர்ந்த மதிநுட்பமுடைய நல்லாசிரியரை யடுத்து அவர் மன மின்புறக் குறிப்பறிந்து குற்றேவல் புரிந்து அரிய பெரியநூல்களைப் பல்காலையந்திரிபறப் பயின்ற அவ்வறிவு கருவியாக் கொண்டு முதனூலோடுமுரணுது உலகவழக்கையும் புலநெறி வழக்கையும் ஒப்பநாடிப் பிறிதோர் சொல்வெல்லுஞ் சொல்லில்லாச் சொற்செறிவுடைத்தாய் நூல்யாத்தாராதலான் மேற்கிளந்த வாய்ப்பு அமைந்தன வெனவுறிக.

புன்கவிஞர் நல்லாசிரியரைடுத்து நன்னூல் பல கல்லாது மனந்தோன்றியாங்குத் தான் தோன்றிகளாய்ப் பண்டிதரெனப் பெயர் புனைந்து கண்டதோர் நூலை வழுவுறப்பயின்ற அவ்வுணர்வு கருவியாய்க்கொண்டு நூலகள் யாத்ததாலன்றோ அவைமேற்கூறிய வாய்ப்பற்றனவாயொழிந்து பலராலாட்சேபிக்கப்பட்டு எண்ணிறந்தன இறந்துபட்டன. இதனான் நல்லிசைப்புலவருரைத்த நூல்கள் ஆயுந்தொறுந் தொறும் இன்பம் பயக்கும் திட்ப நுட்பமுடையன வாயிருக்குமென்பது போதரும்.

இனி அவர் கவிகளிற் காண்கின்ற நயங்கள் பலவற்றுள் ஒரு சிறிது ஆராய்வாம். மாதவி தன் புதல்வியாகிய மணிமேகலையை நோக்கி மலர்வனம்புகுந்து மலர்கொய்து வருவாயென்றேவிய காலத்துச் சுதமதியென்பவள். பேரழகு வாய்ந்த நமது மணிமேகலையைத் தனியே ஓரிடத்திற்கனுப்புதல் ஏதமுடைத்தாம் யானும் முன்னொருகாலத்துத் தனியே சென்று ஏதமுற்றிருக்கின்றேனெனக்கூறி மணிமேகலைக்குத் துணையாய்ச் சென்றனள். இருவரும் ஒரு மலர்வனஞ்சென்று புக்கனர். அஞ்ஞான்று உதயகுமரனென்பான் எட்டி குமரனால் மணிமேகலை மலர்வனம் புக்கதையறிந்து மணிமேகலையின் மீது காதல்கொண்டு தேரின்மீதேறி மணிமேகலை இருக்கிற மலர்வனம் நோக்கிவந்தான. அவன் வருகிறதேரொலியை மணிமேகலை செவியுற்றுச் சுத்மதியைநோக்கிஉதயகுமரன் என்மீது மிக்க காதலையுடையவனென்று மாதவிக்கு வயந்தமாலை யறிவுறுத்தியதைமுன்னமேகேட்டுளேன். இவ்வொலிஅவனுடைய தேரொலி போலும்; இத்துன்பத்திற்குள்ளகப்பட்டேன்; என்செய்வேனென்று நடுக்கமுற்றாள். அதைக்கேட்டுச்சுதமதி அவளை ஆங்குள்ள பளிக்கறையில் புகுத்தித் தாழ்க்கோலிட்டுக்கொண்டு உள்ளேயிருக்கச் செய்துவிட்டுத் தான் அப்பளிக்கறைக்குச் சிறிதுதூரத்தேநின்றாள். அவளை உதயகுமரன் கண்டு மணிமேகலையின் மீது காதலுற்றிருப்பதைப் புலப்படுத்தி யுரையாடினான். இச்சந்தர்ப்பத்தைச் சிறிது ஆலோசிக்கவேண்டும். உதயகுமரன் . காமவெறி உற்றவனானன். காமம் எத்தன்மையதென்றால் "தொடிற்சுடினல்லது காமம் போல்விடிற் சுடலாற்றுமோதீ; என்றபடி தீயினுங் கொடிது.

விஷம் உண்டபின் உயிர் போக்கும். இதுநினைவாலுயிர் முடிக்கும். எத்துணை அறிவுடையவர்களையும் அவர்தம் நிலையினின்றும்மாற்றும் பான்மையது எனப் பெரியர் கூறுவர். விசுவாமித்திர மஹருஷி முதலானோர்கள் மேனகை முதலான தேவமாதர்களால்தம்நிலைமை மாறித்தபசு இழந்தமை யாவருமறிவர். சுதமதி மணிமேகலை என்பவர் இரண்டுபெண்கள் அந்தோ! என்செய்வர்; இப்பொழுது காமமென்னுங் கள்ளுண்டவனாகிய உதய குமரனிடத்தினின்றும் தப்ப வேண்டும். இவ்வகையான சந்தர்ப்பங்களில் அவ்வப்பாத்திரங்கட்கேற்பப் பேசுவது கவிகட்கு மிக்கக் கஷ்டமான காரியமாகும். இவ்விடத்தில் மதுரைக் குலவாணிகன் சாத்தனாரென்னும் பெரும் புலவர், சுதமதி கூறு ம்கூற்றை மிக வனப்புத் தோன்றக் கூறுகின்றார்:

* "இளமைநாணி முதுமையெய்தி
உரைமுடிவுகாட்டிய வுரவோன்மருகற்கு"

இவ்வடிகளால்

உதயகுமரனது மனக்கொள்கையை விரைவில் மாற்றுதற்கு அவன் குலத்திற்றோன்றிய ஒருவனது அரியசெயலை யெடுத்து முற் கூறுகின்றாள். சோழன் கரிகாற் பெருவளத்தான் இளைஞனாயிருந்த காலத்து தம்முட்பகை கொண்டுவந்தாரிருவரது வழக்கை முதுமைப் பருவமுடையார் யாவரும் உகக்கும் வண்ணம் அவ்வழக்கைத் தீர்த்து வைத்தோன் மரபிற்றோன்றிய எனச்சுட்டிக்கூறினாள்.

இளமை நாணியென்றது தான் கூறிய உரைமுடிவு நீண்ட காலம் கல்வி கேள்விகளிற் சிறந்த முதுநுணர் நீர்மையாரால் ஆய்ந்து சொல்லத்தக்க சொல்லைப்போல் சிறப்புவாய்ந்து விளங்கினதால் அச்சொல்லைக் கேட்டார் இளைஞன் கூறியதெனப் புறக்கணியாதிருத்தற்குத்தான் அப்பொழுது இளமைப் பருவத்தை வெறுத்தா

* "உரைமுடிவு காணானிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன்குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்."

னென்றவாறு. முதுமையெய்தி உரைமுடிவு காட்டிய என்றது
இவன் கூறிய உரை இயற்கையறிவிற் சிறப்புற்று பல்லாண்டுகள்
பல்லோர்பால் பல்கலைகளையும் பயின்றும் கேட்டும் காலத்தைக்
கழித்த முதுமைப்பருவமெய்தியோரால் கூறத்தக்கதோர் பெற்
றித் தாயிருந்தமையால் அவர்க்கேற்பமுதுமை வேடந்தாங்கி உரை
முடிவு காட்டின னென்றவாறு "உரவோனென்றது" அறிவு
கொண்டே இன்னன்னன நிரூபிக்சத்தக்கதோர் பெருமைவாய்ந்த
வன் என்றவாறு. இதனான் மாறுபாடுற்றாரின் வழக்கை யாவரும்
வியக்கும்படி முடிவுகாட்டிய கரிகாற் பெருவளத்தோன் மரபிற்
றோன்றியவன் "தந்தையினும் சதமடங்குதனயன்" என்றநியா
யப்படி அவனைக்காட்டிலும் மிக்க அறிவிற் சிறந்தோனாயிருத்தல்
வேண்டுமென்பதும் வழக்கறுத்துமுறைசெய்யுமவன்றானே முரணா
ற்றதோர் வழக்கில் அகப்படலாகா தென்பதும் அகப்படின் யாவ
ராலும் இகழத்தக்க தாயிருக்குமென்பதும் குறிப்பாற் கிடைத்த
பொருளாகக் கொள்க.

"அறிவும் சால்வும் அரசியல் வழக்குஞ்
செறிவளை மகளிர் செப்பலு முண்டோ
அனைய தாயினும் யானொன் று கிளப்பல்"

இவ்வடிகளால் உதயகுமரன் நாண மடையும்படி பேசுகின்
றாள். அறிவுஅமைதி அரசநீதிகளைக்கரிகாற் பெருவளத்தான் மரபிற்
றோன்றியவன் பிறருக்கெடுத்துரைக்க வேண்டுமேயன்றி பிறருரைக்
கத்தான் கேட்பதெள்ளற்பாற்று. அதனினும் ஓர் பெண் எடுத்
துரைக்கும்படி நேர்ந்தது மிகவும் இகழத்தக்க தொன்றாம். வேறொரு
பரிகாரத்தால் விலக்கவொண்ணாத காயமயக்க முற்ற உள்ளத்தைப்
பேதிப்பதற்கு முன்னர் கரிகாற்பெருவளத்தானுடைய அருஞ்செய
லைச் சுட்டி உணர்த்தி. அதிற் கண்வைக்கும்படி செய்தாள். அதனா
லும் அவன் உள்ளம் நேர்படாததைக் குறிப்பாலுணர்ந்து பின்
நாணமடையும்படி பேசினாள். "செறிவளைமகளிர் செப்பலு முண்
டோ" என்றது அறிவின் மிக்க ஆடவர்கட்கு மகளிருரைக்கத்
தக்கதோர் விஷயமுண்டோ என்றவாறு. ஓகாரம் எதிர்மறை
யாக்கி இல்லையெனப் பொருள்கொள்க. "அனையதாயினும் யானொ
ன்றுகிளப்பல்" என்றது அங்ஙனமாயினும் யானொன்றுரைப்
பேன் என்றவாறு. தனக்குப் பொருந்தாததோர் காரியத்தில் முயற்
சித்தல் கூடாதென்பது நூன்முடிவு, அவ்வாறிருக்க "அனையதா
யினும் யானொன்று கிளப்பல்" என்றது வழுவன்றோ? நன்குவினா
யினாய் இவள் கூறும் இவ்வுரை தவவேடம்மேற் கொண்டொழுகும்
மணிமேகலைக்கும் உதயகுமரனுக்கும் வரும் ஏதத்தைப் போக்கி
நன்மை விளைக்குமென்ற கருத்துடன் கூறத் துணிந்தாளாதலால்
வழுவாகா தெனக்கொள்க.

"விலைவிளங்கு தடக்கைவிறலோய் கேட்டி" என்று விளித்தாள், இங்குஉதயகுமரனை எல்லாத்தொழிலும் கைபுகுந்திருக்கின்ற நீண்ட கையையும் வலிமையையுமுடையோயென அவன் வீரப்பாடு புலப்படக் கூறினாள்; இதனான் உன் வீரத்திற்குத் தோற்றுக் காமுறும் வீரமகளிரைக்கூடி இன்புறுதற்குரியோனேயன்றி தவ வேடம் பூண்ட மணிமேகலையை அங்ஙனம கருதற்குரியோனன்றெனக் குறிப்பாலுணர்த்தினாள்.

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் காவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலர் வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்"

இவ்வடிகளான், மணிமேகலையை விரும்பாது வெறுத்து நீங்குதற்காக யாக்கையின் நிலையாமையையும் இழிவுடைமையையுங் குறித்து விரிவாய்ப் புலப்படுத்திக் கூறினாள்.

இவ்வுடம்பு கன்மவயத்தாலுண்டானது. மேலும் கன்மத்திற்கு விளைநிலமாயுள்ளது. சந்தன முதலியன வணியாதொழியின் புலானாற்ற முடையதென வெறுக்கத்தக்கது. மூப்பெய்தி அழிவுறுதற்குரியது. குற்றங்கட்கெல்லாம் இருப்பிடமாயுள்ளது. பாம்புறையும் புற்றுப்போல பகைமை முதலாய குடிகொள்ளத்தக்கது. எண்ணிறந்த துன்பங்களை யெல்லாம் தன்வயிற் கொண்டுளது. மக்கள் யாக்கையின் தன்மை இங்ஙனமாகும். சிறப்புடையோய், இவ்யாக்கையின் புறவாய்கண்டு மயங்காது அகவாயைச்சிறிது ஆலோசித்துப் பார்த்து இதிற்கொண்டுள்ள பற்றுள்ளத்தை அகற்றுவாய் எனக்கூறினாள்.

ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் ஈண்டு இச்சந்தர்ப்பங்கட்கேற்ப்பொருட் செறிவுமுதலியவனப்பு வாய்ப்பக்கூறியது பாராட்டத்தக்கது. இது போன்ற எண்ணிறந்தன நல்லிசைப் புலவர் கூறியிருக்கின்றார்கள். அவற்றுட்சிலவற்றை ஈண்டெடுத்துரைப்பினும் பல்குமாதலால் விடுத்தனம். அறிவுடையார் அவருரைத்த நூல்களைப் பயின்று இன்புறுவார்களாக.

இங்ஙனம்

பண்டித. ஆ. அ[illegible]ங்கராமாநுஜப்பிள்ளை
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், சேதுபதிஹைஸ்கூல், மதுரை.